விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 02 திங்கட்கிழமை (16.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180




## சிவத்தமிழ் அன்னை

# தங்கம்மா அப்பாக்குட்டி நேற்று இறையடி சேர்ந்தார்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தனது 83-வது வயதில் நேற்று இறைபதமடைந்தார்.

உடல் நலக் குறைவு காரணமாக கடந்த சில வாரங்களுக்கு முன் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இவர், நேற்று மதியம் 12.15 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

1925 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி தெல்லிப்பழையில் பிறந்த தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், சைவ சமயத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

ஆரம்ப காலங்களில் ஆசிரியையாகப் பணியாற்றியுள்ள இவர், பல சமூக சேவைகளையும் மேற்கொண்டிருந்தார். துர்க்காபுரம் மகளிர் இல்லம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம் ஆகியவற்றை அமைத்து ஆதரவற்றவர்களைப் பராமரித்து வந்தார்.

அத்துடன் சிங்கப்பூர், மலேசியா, தமிழ் நாடு போன்ற நாடுகளில் சமய சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். இவரது சமூக, சமயப் பணிகளைக் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1998 ஆம் ஆண்டு இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயத் துறை மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள விவசாய உற்பத்திகளை அதிகரித்தல், அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், விவசாய உள்ளீடுகளை இலகுவாக வழங்குதல் மற்றும் உள்ளூரில் நியாய விலையினை நிர்ணயித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக உயர் மட்ட மாநாடொன்று இன்று காலை 10.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டில் விவசாயத்துறை சார்ந்த அரச அதிகாரிகள், விவசாயத்துறையுடன் தொடர்புள்ள ஏனைய துறைகளைச் சார்ந்த அரச அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகள் உட்பட உரிய அனைத்துத்தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

உள்ளூர் விவசாய உற்பத்தியாளர்களினதும் நுகர்வோரினதும் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் 2 பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று 2 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள நாவற்குடாவில் நேற்றிரவு 7.15 மணியளவில் அடையாளம் தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே இரண்டு பொலிஸாரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வாகரைப் பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் குறிப்பிட்ட இருவரும் தமது விசேட கடமை நிமிர்த்தம் தற்காலிகமாக காத்தான்குடிப் பொலிஸில் இணைக்கப்பட்டிருந்ததாகவும் தமது பகல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பில் விமானக் குண்டு வீச்சு

# வீடுகள், பாடசாலை கட்டடங்கள் சேதம்

## நால்வர் பலி; 11 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் விமானப் படையினரது குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை நடத்திய குண்டுத் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுக் காலை 9.50 மணியளவில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் வீடுகள் மற்றும் பாடசாலைக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் களைந்தால் புலிகளுடன் பேச்சு

### ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தகவல்

(கொழும்பு)

ஆயுதங்கள் களையப்படும் என்ற நிபந்தனைக்குக் கட்டுப்படுவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்திடம் எழுத்து மூலம் உறுதியளிக்கும் வரையில் பேச்சுவார்த்தைகள் தொடரப்பட மாட்டாதுஎன இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவித்துள்ளதாக திவயின ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வேயின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் தேடுதல் பதினைந்து பேர் கைது

(வவுனியா)

பொலநறுவைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேடுதல் நடவடிக்கையின்போது அந்தப் பிரதேசத்திலுள்ள அரிசி ஆலைகளே அதிகளவில் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இந்த அரிசி ஆலைகளில் பணியாற்றியவர்களே பெருமளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தற்போது விசாரணைகளுக்கு உட்பட்டு வருவதாகவும் பொலநறுவைப் பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி (12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னையின் மறைவு பேரிழப்பு நல்லை ஆதீன முதல்வர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

அறப் பணி மூலம் சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றிய துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவு ஈழத் தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவு குறித்து நல்லை ஆதீன முதல்வர் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 65 வருடங்களுக்கு மேலாக சமய சொற்பொழிவாற்றி மக்களை இறை நம்பிக்கையுடையவர்களாக வழிப்படுத்திய பெருமை அவருக்கேயுரியதாகும்.

ஒவ்வொரு ஆலயங்களும் சிவப்பணியாக அறப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற உயரிய கருத்தை நடைமுறையில் செயற்படுத்தி ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டார்.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்கள் சிவத் தமிழ்அன்னை மீது அளவு கடந்த பக்தியும் மரியாதையும் கொண்டுள்ளனர்.

அவர் மீது கொண்ட அசையாத நம்பிக்கையால் அவரின் அறப்பணிக்கு உலகெங்கிலும் இருந்து நிதியுதவி தேடி வந்த வண்ணம் உள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரை நாளுடன் அலுவலகங்களை மூடி

## சிவத்தமிழ்ச் செல்வியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனைவருக்கும் அழைப்பு

இறைபதம் அடைந்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் இடம்பெறவிருப்பதால் பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தமது பணிகளை இன்று மதியத்துடன் நிறைவு செய்து அன்னையின் இறுதிச் சடங்கில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி அவர்களும் சிவபூமி அமைப்பாளர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் கேட்டுள்ளனர்.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆற்றிய அறப்பணிக்கு மதிப்பளிக்கும் வகையில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் இன்று அரை நேரத்துடன் பாடசாலைகளை மூடி அன்னையின் இறுதிச் சடங்கிலும் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அவர்கள் விடுத்த கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (ரு)

# அன்னையின் இறுதி நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவி துர்க்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இறுதி நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

எங்கள் தேவஸ்தானத்தின் ஒப்பற்ற தலைவி துர்க்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் துர்க்கை அம்பாளின் திருவடியை நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் அடைந்தார்.

அம்மையாரின் இறுதிப் பிரார்த்தனை வைபவம் இன்று காலை 9.30 மணிமுதல் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள துர்க்காதேவி யாத்திரிகர் விடுதியில் நடைபெற்றுப் பின் 2 மணிக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பமாகி தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும் என்றுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானம்.

(ச-5)

# சுவாமி சித்ரூபானந்தாவின் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆன்மிக அன்னையாக விளங்கிய சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம்.

தள்ளாத வயதிலும் தளர்வின்றி சைவத்துக்காக சிவத்தமிழ் அன்னை ஆற்றிய பணி அளப்பரியது.

ஆலயத்தை மையமாகக் கொண்டு அன்னை ஆற்றிய சமுதாயப் பணியை அகில உலகமும் போற்றுகின்றது.

அன்னையின் மறைவினால் துயரடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

(ச)

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுக்கு இந்து மாமன்றம் அனுதாபம்

சைவத்தமிழ் உலகிற்கு அளப்பரிய பணியாற்றிவந்த முதுபெரும் இறைபணியாளரான சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி காலமாகிவிட்டார் என்பதை அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகின்றது.

நீண்டகாலமாகவே தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகப் பணியாற்றிவந்திருப்பதுடன். அதனுடன் இணைந்த வகையிலான சமூகப் பணிகளின் ஊடாகவும் யாழ்.மண்ணில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை அம்மையாரைச் சாரும்.

இதனால் நம் நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் வாழும் இந்து மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு வந்தவர். அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையின் கௌரவ உறுப்பினரான அம்மையார் துணைத்தலைவராகவும், பின்னர் மாமன்ற அறங்காவலர் சபையிலும் இணைந்திருந்து மாமன்றத்தின் செயற்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் துணை நின்றவர்.

மாமன்றம் 2005ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்திய பொன்விழா இந்து மாநாட்டின்போது 'தெய்வத்திருமகள்' என்ற பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்திருந்தது.

அம்மையாரின் மறைவு இந்து மக்களுக்கு பேரிழப்பாகும். இவரது மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமியம்பாள் சமமேத ஸ்ரீநடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றது.

(ச)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் இரங்கல் செய்தி

சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலமான செய்தி நெஞ்சில் கனமானது. சைவத்தமிழ் மேம்பாட்டிற்கும் மறுமலர்ச்சிக்குமான பெரும் விசையாக அவரது வாழ்வும் பணிகளும் ஒளிர்ந்தன.

எங்கள் தாய்த் தெய்வமான துர்க்கை அம்மன் ஆலயத்தை மையமாகக் கொண்டு அவர் ஆற்றிய சமூகப்பணிகளால் பல ஆதரவற்ற சிறுவர்களின் பெரியம்மா ஆகி கருணை புரிந்தார். அவரது உதவியினால் பல சமூகநலத்திட்டங்கள் உயிர்ப்புப் பெற்றன.

அன்னையின் சமூக, சமயப் பணிகளை கௌரவித்து எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி பெருமை தந்தது.

ஆலயத்தை சமூகப் பணி மையமாக்கிய பெருந் தலைவியாகிய அவரின் புகழ் வரலாற்றில் என்றென்றும் காக்கப்படும்.

அவரது பிரிவில் தவிக்கும் துர்க்கா மகளிர் இல்லப் பிள்ளைகள், சைவத் தமிழ் இதயங்களோடு எங்கள் பல்கலைக்கழக சமூகமும் இணைந்து கொள்கிறது. (ச-5)


**ஆனந்தி திருமணசேவை**

**மணமகன் தேவை**

கவர்ச்சியும் வெள்ளை நிறமுங் கொண்ட தேசியக் கல்லூரி ஒன்றில் ஆசிரியையாகப் பணிபுரியும் வர்த்தகப் பட்டதாரி பெண்மணி; உயரம் ஐந்து அடி ஐந்து அங்குலம் வரை 1973ல் பிறந்தவர்; கிரக பாவ சங்கியை 28 1/4; பூரம் 4ஆம் பாதம்; செவ்வாய் தோஷமற்றவருக்கு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் மணமகனை நாடுகின்றோம். தபால் மற்றும் நேரடியாகவும் 021 222 8708 தொலைபேசிமூலமும் தொடர்பினை ஏற்படுத்தலாம். V.Aசிவராசா ஜோதிடர் 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(1346)


## துர்க்கா துரந்தரிக்கு அகம் நெகிழ்ந்த அஞ்சலி



மாதர் புலத்தில் மாணிக்கமாய் திகழ்ந்து உலகமெங்கும் சைவத் தமிழ் பரப்பி சிவபூமியின் பெரும் புகழ் காத்த துர்க்கா துரந்தரி

**கலாநிதி (செல்வி)**

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகளை செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய பரம்பொருளைத் தொழுகின்றோம்.

சிவபூமி அறக்கட்டளை
சிவபூமி பாடசாலை
சிவபூமி முதியோர் இல்லம்

(C-1224)

## சிவத்தமிழ் அன்னைக்கு இதய அஞ்சலி



ஆதரவற்ற சிறார்களை அரவணைத்து கல்வி புகட்டி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி ஒப்பற்ற பணியாற்றிய

**சிவத்தமிழ் செல்வி**

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அவரின் ஆத்மா இறைபதமடைய பிரார்த்திக்கின்றோம்.

கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம், திருகோணமலை.

(C-1222)

## துர்க்கா துரந்தரிக்கு இதய அஞ்சலி

சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும் பணி ஆற்றிய பெண்ணிற் பெருந்தகை



**அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் மறைவால் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் ஆத்மா இறைபதம் அடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி

தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம்
உரிமையாளர்களும் ஊழியர்களும்

(C-1223)

## இதய அஞ்சலி

**சிவத்தமிழ்ச் செல்வி**

**அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**



*நாவலருக்குப் பின்னான சைவசமய வளர்ச்சிக்காக ஒளியேற்றிய தீபமே! துர்க்கா புரத்தரசியே ஏழைகளின் அன்னையே!! கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு*

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"செந்தமிழோடுயர் சைவமும் சமூகமும் வாழ
ஜெகமதில் உழைத்திடுவோம்"

அன்னையின் பிரிவால் துயருறும்
இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை
வட்டு.இந்து வாலிபர் சங்க கொழும்புக் கிளை
வட்டு.இந்து வாலிபர் சங்க கனடாக் கிளை

(C-1220)

மனிதனாகப் பிறப்பது ஒரு பொதுவான நிகழ்ச்சி. ஆனால், ஒருவன் பெரியமனிதனாக இறப்பது தன்னுடைய முயற்சியாலேயே ஆகும். -பாலி

# வலம்புரி

## அறப்பணியால் வான் புகழ் பெற்ற அன்னையே எங்குற்றாய்!

சிவத்தமிழ் அன்னை துர்க்கா துரந்தரி கலாநிதி (செல்வி) தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற செய்தி நெஞ்சைப் பிளக்கிறது.

ஈழத்தமிழர்களின் தாயாக விளங்கிய அன்னையின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

சிவபூமி என்று போற்றப்படும் ஈழத்தின் பெருமைக்கும் புகழுக்கும் அறப்பணிக்கும் அடையாளச் சின்னமாக விளங்கிய சிவத்தமிழ் செல்வி அவர்கள் ஆதரவற்ற சிறார்களின் தாயாக - தள்ளாடும் முதியோரை தாங்கும் அன்புக்கரமாக விளங்கினார்.

அவரின் கணீரென்ற குரலோசை உலகத்தமிழரை வசப்படுத்தியது. சைவத்தை உலகமெல்லாம் பரப்பியது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் தெய்வீகச் சொற்பொழிவைக் கேட்பதற்காக ஆலயங்களில் கூடும் அடியார் கூட்டம் கடலலையா என்று கேட்கும் அளவிற்கு பிரமிக்க வைக்கும்.

ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும், மலேசியா,சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளிலும் அவரின் சொற்பெருக்கை கேட்க -ஆன்மிக சிந்தையை, உள்ளீர்க்க -வெள்ளம்போல் மக்கள் கூடுவர். அந்தப் பெருமை அனைத்தும் ஈழத்துக்குரியதாயிற்று.

அறப்பணிகளிலும், தவப்பணிகளிலும் செல்வி உயர்ந்து நின்ற சைவ சமயத்தின் பெருமை சமகாலத்தில் குன்றி விட்டதென்னும் குறை கூறும் படலத்தை உடைத்து எம் மண்ணில் அறப்பணியை சிவப்பணியாக மேற்கொண்டு ஈழத்தமிழரின் பெருமையை வான்புகழ் உயர்த்திய அன்னை இன்று எம் மத்தியில் இல்லையே என்று எண்ணும்போது இறைவா! ஏன் எங்கள் அன்னையை எடுத்துக் கொண்டாய்.

போதும் என்று எண்ணினையோ அன்றி ஈழ மண்ணில் நித்தமும் இடம்பெறும் துன்பத்தை சிவத்தமிழ் அன்னையைப் பார்க்க விடலாகாது என்று முடிபு செய்தனையோ ஏன் இறைவா! நாம் யாரிடம் ஆறுதலடைவோம்.

யாரிடம்போய் ஆசிபெறுவோம் என்ற ஏங்கலிலும் இறைவா எங்கள் அன்னை உன் திருவடியில் இருந்து எம்மை வாழ்த்த அருள்புரி அதுவே நாம் வேண்டும் பிரார்த்தனை.

# நல்லெண்ணம் இல்லாவிடின் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிலிருந்து வெளியேறத்தயார்

## கலாநிதி தேவநேசன் நேசையா தெரிவிப்பு

(கொழும்பு)

தன்மீதான நல்லெண்ணம் மாறுபட்டுள்ளது போலத் தென்படுவதாகவும்



அது தொடர்பாக தமக்கு உறதியான அபிப்பிராயம் ஏற்பட்டால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேறத் தயாராக இருப்பதாகவும் கலாநிதி தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

15 முக்கியமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை மேற் கொண்டுவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 8 உறுப்பினர்களில் ஒருவ ரான தேவநேசன் நேசையாவை ஆணைக்குழு அமர்வில் கலந்து கொள்வதை தவிர்க்குமாறு ஆலோசனை தெரிவித்து ஜனாதிபதியின் செயலாளரால் நேசையாவுக்கு கடிதம் அனுப்பப் பட்டிருந்தது.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது , எனது உறுப்புரிமை தொடர்பாக கேள்வி எழுப்பி ஜனாதிபதி அலுவலகம் எனக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

அதற்கான பதிலை கடந்த வெள்ளிக் கிழமைக்கிழமைக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் வெள்ளிக்கிழமை வரை நான் காத்திருக்காமல் கடந்த புதன்கிழமையே பதில் அனுப்பிவிட்டேன்

மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தில் நான் ஆலோசகராக பணியாற்றுவது தொடர்பாகவே ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் கேள்வி எழுப்பபட்டிருந்தது

இதிலிருந்து நான் புரிந்து கொள்ளும் விடயம் என்னவென்றால் விசாரணை ஆணைக்குழுவின்உறுப்பினராகஎன்னை ஜனாதிபதி நியமிக்கும் போது இருந்த நல்லெண்ணம் தற்போது மாறியுள்ளதாக தென்படுகிறது என்பதே. இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் தெளிவுபடுத்தினால் நான் ராஜினாமா செய்யத்தயார் என்றும் தேவநேசன் நேசையா கூறினார்.

இதேவேளை மேலதிகமாக மற்றொரு கடிதத்தை திங்கட்கிழமை அனுப்பிவைக்க இருப்பதாக நேசையா தெரிவித்திருப்பதாக ஆங்கில நாளேடொன்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் ஜனாதிபதியுடன் நான் எங்கு நிற்கிறேன் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நான் விரும்புகிறேன் எனது பிரசன்னமானது ஆணைக்குழவின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருக்கிறதா என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட வேண்டிய தேவை உள்ளது.

அதனாலேயே மேலதிகமாக கடிதமொன்றை அனுப்ப வேண்டிய தேவை இருப்பதாக நான் கருதுகிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஆணைக்குழுவிடம் விசாரணைக்கென ஒப்படைக்கப்பட்ட இரு பிரதான சம்பவங்கள் தொடர்பான விசாரணை அமர்வுகளில் நான் அமர்ந்திருக்க முடியாவிடில் ஒரு நோக்குமின்றி ஆணைக்குழுவில் தொங்கிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

(அ)

# வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து இலங்கை 150 மில். அமெரிக்க டொலர் கடன்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களின் பொருட்டு அரசாங்கம் வெளிநாட்டு வங்கிகளிட மிருந்தம்150 மில்லி யன் அமெரிக்க டொலர் கடனைத் திரட்டியுள்ளதாக மத்திய வங்கி தெரி வித்துள்ளது.

வருடாந்த கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் முன்னணி சர்வ தேச வங்கிகளிடமிருந்து இலங்கை இந்தக் கடன் தொகையைத்திரட்டியுள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டி ருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அனுமதி வழங்கப் பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கே இந்த நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதற்கிடையில் இலங்கையின் வெளி நாட்டுக்கடன்கள் அதிகரித்துச் செல்கின் றமை தொடர்பில் தாம் கவனம் செலுத்தி யுள்ளதாக Fitch Ratings எனும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து நாம் கூடுதல் கவ னம் செலுத்தியிருக்கிறோம். இது இலங்கைக்கு மிகவும் ஆபத்தானது என அந்த நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் மெக் கோமாக் தெரிவித்துள்ளார். வெளி நாட்டுக் கடன்களின் அதிகரிப்பு மற்றும் வட்டி அதிகரிப் பினால் இலங்கையின் நாணயத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் படி 2007 ஆம் ஆண்டிற்கான கடன் நிலுவை 2.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக குறிப் பிடப் பட்டுள்ளது. இருப்பினும் இந்த விடயம் ஏற் றுக் கொள்ளக்கூடிய ஒன்றே என மத்திய வங்கியின் தலைமைப் பொருளியலாளரான நந்தலால் வீரசிங்க தெரிவித் துள்ளார். (அ)

# ஜீ.எஸ்.பி. பிளஸ் விடயத்தில் தலையிடுமாறு பிரித்தானியர்விடம் ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

ஆடை ஏற்றமதி வரிச்சலுகையை (ஜீ.எஸ்.பி.பிளஸ்) இலங்கைக்குக் கிடைக்கச்செய்யும் விடயத்தில் பிரித்தானியாவைத் தலையிடுமாறு மக்கள் விடுதலை முண்ணணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் பிரிதானியாவுக்கு விஜயம் மேற்கொண்ட சோமவன்ஸ பிரித்தானியாவின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்ட்ரூ லோவினைச் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அன்ட்ரூ லோ , பிரித்தானிய நாடாளுமன்றத்தின் இலங்கைக் குழுவின் தலைவருமாவார். ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுமதி வரிச்சலுகையை ரத்துச் செய்யுமாயின் அரசாங்கம் மட்டுமன்றி ஆடைத்துறையில் தொழில்புரியும் சாதாரணமக்களும் பாதிக்கப்படுவார்கள் என்றும் சோமவன்ஸ அமரசிங்க அன்ட் ரூவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை மேற்படி சலுகை தொடர்ந்தும் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் வகையிலான முயற்சிகளை முன்னெடுக்குமாறு பிரித்தர்னிய தொழிற் கட்சிப் பாராளுமன்ற உறுப்பி னரிடம் சோமவன்ஸ வேண்டியுள்ளார்.

ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கையின் ஏற்றுமதி வரிச்சலுகையை மேலும் நீடிப்பது குறித்து கலந்துரையாடிய சில வாரங்களின் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் இவ்வாறான முயற்சியை மேற்கொண் டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 43

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### வாசற்படியில் உட்காரக் கூடாது என்பது ஏன்?

வாசற்படியில் இருக்கும் சிறுவர்களை பாட்டிமார் விரட்டி அடிப்பதுண்டு வாசற்படியில் அமரக் கூடாது என்று அன்புடன் உபதேசிப்பதும் உண்டு. வாசல் வழியாக வரும் போகும் நபர்கள் தட்டிவிழும் சாத்தியம் உள்ளதாலே இவ்வாறு கூறுகின்றனர் என்று கருதி வருகின்றோம்.

ஆனால் வாசற்படியிலோ நிலைப்படியிலோ இருக்கக் கூடாதென்பது சரியான காரணத்துடன் என்பது கண்டறிந்துள்ளனர். "டௌசிங்ராட்" என்ற கருவியை வாசற்படியில் பிடித்தால் வாசற்படியிலிருந்து எதிர்சக்திகள் (நெகடிவ் ஃபோர்சஸ்) வெளியாவது காணலாம். இதனால் வாசற்படியில் அமர்ந்தால் நம் உடலில் எதிர்சக்திகள் புகுந்து செல்லும்.

இதை அன்றே புரிந்து கொண்டிருந்த ஆசாரியர்கள் வாசற்படியில் உட்காருவதை எதிர்த்திருந்தனர். வாசற்படிக்கு உட்பக்கமோ வெளிப்பக்கமோ நின்று எதையும் வாங்கவோ கொடுக்கவோ கூடாதென்பதற்கும் சரியான காரணமும் இதுவே தான்.

வாசல் நிலையின் நாலு பக்கங்களும் சம சதுரவடிவிலுள்ளதனால் நெகடிவ் சக்தி வெளிவருகின்றது. வாஸ்து சாஸ்திரத்தை மிக முக்கியமாகக் கருதும் சீன மக்கள் தங்கள் வீடுகளில் அமைக்கும் வாசல்கள் மற்றும் ஜன்னல்களின் நிலைகள் வேறு வடிவத்தில் மேல் பாகம் நோக்கி வளைந்திருக்கக் காணலாம். இது நெகடிவ் சக்திகளைத் தவிர்ப்பதற்காகவே என்று கூறப்படுகிறது. நமது கோயில் வாசல்களிலும் இவ்விதமே அமைத்துள்ளனர்.

# சிவத்தமிழ் அன்னைக்கு எங்கள் இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் தூய ஆன்மா பரம்பொருளின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெற இறைவன்தாள் இறைஞ்சுகின்றோம்.

**E.S. பேரம்பலம் சக நிறுவனம்**
இல.50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கஜமுகன் ஹாட் வெயார்ஸ்**
இல.147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வியாவில் ஐயனார் தேவஸ்தானம்**
காரைநகர்

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.41, பெரிய கடை , யாழ்ப்பாணம்.

**அண்ணா தொழிலகம்**
இணுவில்

**திருமுருகன் கொம்நெற்**
இல.259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# முதலுதவி

இன்றைய காலகட்டத்தில் விபத்து சர்வ சாதாரண மாக நடந்துகொண்டிருக்கிறது. வாகன விபத்து வெடிகுண்டு விபத்து, தீவிபத்து , பூகம்பம், கட்டடம் சரிந்து விழுதல் என பல்வகைப்பட்ட விபத்துக்களை நாம் அன்றாடம் கேள் விப்படுகின்றோம்.

ஒரு விபத்தைப்பார்த்தால் நம்மில் பல பேர் நமக்கு எதுக்கு வம்பு என்று ஒதுங்கிப்போய்விடுவதும் உண்டு... சில பேர் துணிந்து போய் உதவி செய்வதும் உண்டு.. அப் படி உதவி செய்ய நினைப்பவர்களுக்கு உபயோகப்படும். "தகவல்" இது! ஒருவன் அடிபட்டுக்கிடக்கிறான் என்றால் உடனடியாக நாம் செய்யவேண்டியது முதலுதவி... அதற் குப் பின்பு தான்ஆஸ்பத்திரி!

விபத்தில் காயமடைந்தவர்களை மூன்று பிரிவாக பிரிக்கலாம்!

முதல்வகை... கொஞ்சம் "சீரியஸ்" ஆனது! உயிருக்கு உடனேஆபத்துதரக்கூடியது. மூளைக்காயம்... முகம் கழுத்துக்காயங்கள்... இதயம்–நுரையீரல்காயங்கள், வயிற்றின் உள்ளுறுப்புக்காயங்கள்... அதிக இரத்தப் போக்கு... இவற்றால்பாதிக்கப்பட்டிருந்தால் அது முதல் வகை என்று நாம் நினைக்கவேண்டும். இவர்களுக்கு உட னடியாக முதலுதவி செய்யவேண்டும் தாமதப்படுத் தாமல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வேண்டும். இப்படி கொஞ்சம் எச்சரிக்கையாகஇருந்தால் பல பேரைக் காப் பாற்றி விடலாம்.

இரண்டாவது வகை– முதலுதவி விரைவாக கிடைத் தால் உயிர் பிழைக்கக்கூடிய மார்புக்காயங்கள் –கை கால் எலும்புமுறிவு... இடுப்பு, முதுகெலும்புக் காயங்கள், சீரான இரத்த சேதம்... இப்படியானவர்களை இரண்டா வது வகையாகப்பிரிக்க வேண்டும்.

ஆபத்து இல்லாத சிறப்புகள்... சிறுகாயங்கள் , இரத்த உறைவுகள்...இதனால்பாதிக்கப்பட்டவர்கள் மூன்றாவது வகையினர்.

ஒருவருக்கு தலையில் அடிபட்டு நினைவிழந்துவிட்டார் என்று வைத்துக்கொள்வோம் அவருக்கு வாந்தி வருவதி னால் புரையேறி மூச்சு அடைப்பு ஏற்படும். இப்படி ஆகாமல் இருக்க... தலையை ஒரு பக்கமாக சாய்த்து வைக்கலாம்!

நாடிதுடிப்பையும் இதயத்துடிப்பையும் தொட்டுப் பார்கக் வேண்டும். அது குறைந்திருந்தாலும் சரி... நின்றிருந்தா லும் சரி... அவருடைய மார்பை நிமிஷத்துக்கு 80 தடவை உள்ளங்கையால் அழுத்தி (Cardiac Message) இதயத் துடிப்பை மீட்பதற்கு உதவ வேண்டும்.

கழுத்தில் காயம் பட்டாலும் ஆபத்து அதிகம். கழுத்துக்கு அடியில் ஒரு துண்டை மடித்துவைக்கலாம். இரண்டு பக்க மும் சிறு தலையணை அல்லது துணி மடிப்புகளை வைத்து கழுத்து அதிகம் அசையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முதுகெலும்பு முறிந்திருக்குமோ! என்ற சந்தேகம் இருந்தால் அவரை அசையவிடக்கூடாது... அதிகமாக அசைந்தால் தண்டுவடத்தில் பாதிப்பு ஏற்பட்டு கை, கால் கள் செயற்படாமல் போய்விடும். அவரை ஒரு கனமான போர்வை அல்லது பாயில் படுக்கவைத்து மெதுவாக தூக்கி மருத்துவ உதவிக்கு அனுப்பிவைக்க வேண்டும்!

கை எலும்பு முறிந்திருந்தால் முறிந்த பாகத்தை உடம் போடு சேர்த்து அசையாமல் கட்டிவிடலாம். கால் எலும்பு முறிந் திருந்தால்... மற்றைய காலுடன் சேர்த்துக் கட்டி விடலாம்... முறிந்த பாகம் தொங்காமல் பார்த்துக்கொள்ள வேண் டும். அப்பொழுதுதான் வீக்கம் உண்டாகாது.

வெட்டுக்காயம், குண்டடிபட்ட காயம்... இதிலெல்லாம் இரத்தப்போக்கு அதிகமாக இருக்கும்... இரத்தம் வெளி யேற வெளியேற ஆபத்து அதிகம்... சுத்தமான துணியை பலமடிப்புகளாக மடித்து காயத்தின் மேல் வைத்து அழுத்த மாக ஒரு பத்து நிமிஷம் பிடித்துக்கொள்ள வேண்டும். இரத் தம் நின்றவுடன் காயத்துக்குக் கட்டுப்போடலாம். சில சம யம் காயப்பட்ட பாகத்தை உயரமாகத் தூக்கிப்பிடித்தால் தான் இரத்தக்கசிவு நிற்கும்!

நண்பர் ஒருவர்

"நேற்று என் கண்முன்னாலேயே ஒரு சின்ன விபத்து நடந்தது! சார்..." என்றார்.

"என்ன!" என்று விசாரித்தேன்.

"ஒரு பஸ்ஸில் வந்துகொண்டிருந்த போது, அந்த பஸ்ஸின் பின்பக்கமாக நின்ற ஒருவர் ரோட்டில் விழுந்து விட்டார்! டிரைவர் அதைக் கவிக்காமல் தன் பாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தார்." என்றார்.

"கண்டாக்டர் உடனே விசில் கொடுத்து பஸ்ஸை நிறுத்த வேண்டியது தானே!" என்றேன்.

"அதுதான் சார் முடியாமல் போச்சு!" என்றார் அவர்.

"ஏன்" என்று கேட்டேன்.

"தவறி கீழே விழுந்ததே அவர்தானே சார்!"என்கிறார்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆயுள் தண்டனை கைதியைவிட மோசமான நிலையில் தமிழக முதல்வர்

## புலவர் புலமைப் பித்தன் தெரிவிப்பு

ஆயுள் தண்டனைக் கைதியை விட மோசமான நிலையில் தமிழக



முதலமைச்சர் இருப்பதாக புலவர் புலமைப்பித்தன் தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோ வில் இடம்பெற்ற பொங்கு தமிழ் எழுச் சிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய புலவர் புலமைப்பித் தன், பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல் வன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட பொழுது கலைஞர் எழுதிய இரங்கற்பாவிற்கு இந்திய ஆட்சி யாளர்கள் மட்டத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு இதனையே உணர்த்துவதாக சுட் டிக்காட்டியுள்ளார்.

இந்த வகையில், சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனைக் கைதிக்கு இருக்கக் கூடிய அழுவதற்கான உரிமைகூட தமிழக முதலமைச்சருக்குக் கிடை யாது என்றும் இந்தியாவில்–தமிழ் நாட்டில் தமிழர்களே இல்லாமல் போய்விட்டதாகவும் புலவர் புலமைப் பித்தன் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸில் உள்ள சீக்கியர்களின் தலையில் உள்ள தலைப்பாவைப் பற்றிக் கவலைப்படும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், தலை போகும் நிலையில் உள்ள ஈழத் தமி ழர்கள் குறித்து கவலை கொள் வதில்லை என்றும் புலவர் புலமைப் பித்தன் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியத் தமி ழன் என்ற அடையாளத்தை தான் கொண்டுள்ள பொழுதும் மானத் தாலும் குணத்தாலும் தான் ஒரு ஈழத்தமிழன் என்றும் புலவர் புல மைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தமிழீழ தேசியத் தலை வர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் தலைமையில் நிச்சயம் தமிழீழ தனியரசு மலரும் என்றும் புலவர் புலமைப்பித்தன் சூளுரைத்துள் ளார். (அ)

# ஓமந்தை சோதனையில் ஏற்படும் காலதாமதத்தால் அத்தியாவசியப் பொருட்களுக்கு வன்னியில் தட்டுப்பாடு

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் அத்தியா வசிய உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் ஆணை யாளரினால் வன்னிப்பகுதிக்கு எடுத் துச் செல்ல அனுமதிக்கப்படும் பொருட்களை ஓமந்தை இராணுவ சோதனை நிலையமூடாகக் கொண்டு செல்வதில் ஏற்படும் காலதாமதத் தாலேயே வன்னியில் உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

வவுனியா (வடக்கு), மன்னார் , முல்லைத்தீவு, கிளிநொச்சியென நான்கு மாவட்டங்களுக்குரிய உண வுப் பொருட்கள் "ஏ–9" வீதி வழியாக வும் சுமார் நான்கு இலட்சம் மக் களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வவுனியாவிலிருந்து லொறிகள் மூலமும் அனுப்பிவைக் கப் படவேண்டியுள்ளது.

ஒரு நாளைக்கு அரச அதிபரின் உணவு ஏற்றிய 18 முதல் 20 லொறி களே வன்னிக்கு அனுமதிக்கப்படு கின்றன. ஆனால் முன்னர் 25 முதல் 30 லொறிகள் அனுமதிக்கப் பட்டுவந்தது. இதேநேரம் வன்னிக் குச் சென்ற லொறிகள் வவுனியா வுக்குத் திரும்பிவருவதிலும் பெரும் காலதாமதமேற்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் பாதுகாப்பு அமைச்சின் செயலாள ருக்கும் வன்னி இராணுவக்கட்ட ளைத் தளபதிக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இலகு நடைமுறையினை கடைப் பிடிக்குமாறும் இதனால் காலதாம தம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம் எனவும் அரச அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளார். யுத்த நெருக்கடி ஏற்பட முன்னர் வன்னிக்கு உண வும் எரிபொருட்களும் லொறிகள் மூலம் தாமதமின்றிக் கொண்டு செல்லப்பட்டன.

வன்னியிலிருந்துமுன்னர் தின மும் பெருமளவு லொறிகள் வவுனி யாவுக்கு வர அனுமதிக்கப்பட்டி ருந்தன.

தற்போது குறைந்தளவு லொறி களே வவுனியா வர அனுமதிக்கப் பட்டு வருவதினால் புளியங்குளத் தில் 150க்கும் மேற்பட்ட லொறிகள் வவுனியா வர காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

லொறிகளை வவுனியாவிற்குள் அனுமதிக்க சனிக்கிழமைகளில் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ள அதேநேரம் பாதுகாப்பு கார ணங்களை முன்னிட்டு ஓமந்தை யில் சோதனை நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. (அ)

## இராசிபலன்

16.06.2008
(ஆனி 02, திங்கட்கிழமை)
திரயோதசி முன்னிரவு 07.45மணிவரை
விசாகம் முற்பகல் 11.01 மணிவரை
இராகுகாலம் 07.23–08.53 மணிவரை
சுபநேரம்–11.53–01.23 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரியதாமதம், வாகனபயம், வீண்பகை, போசனசுகம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை, தேகநலன். |
| மிதுனம் | ஆரோக்கியம், சுவாரஸ்யம், பகைவர் நேசம், முயற்சி கைகூடும். |
| கடகம் | வியாபார சிந்தை, சிறுவியாதி, முயற்சி தாமதம், பொருள்விரயம். |
| சிங்கம் | தாய்வழி உறவு, சுபசெலவு, புதிய விடயம், நல்ல் முயற்சி. |
| கன்னி | கூட்டுமுயற்சி, போசனசுகம், நல்ல வருமானம், இனிய சம்பவம். |
| துலாம் | கடினவார்த்தை, வேலைச்சுமை, பணவிரயம், மரியாதைக்குறைவு. |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, போசனசுகம், நல்ல முயற்சி, நண்பர்கள்சந்திப்பு. |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, வீண்மனஸ்தாபம், பிரயாணம். |
| மகரம் | தடைப்பட்டகாரியம் கைகூடும், கீர்த்தி, விருந்துபசாரம். |
| கும்பம் | தொழில் மேன்மை, நல்ல செய்தி, காரிய அனுகூலம். |
| மீனம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, பிரயாணம். |

வளவன்


# மியன்மாரில் இருந்து 10ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி

மியன்மாரில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்டுள்ள பத்தாயிரம் மெற்றிக் தொன் அரிசி நாரஹேன் பிட்டி உணவுக் களஞ்சிய சாலை யில் வைக்கப்பட்டிருப்பதாக வர்த்தக வாணிப நுகர்வோர் அமைச்சு தெரி விக்கிறது.

வெள்ளைப் பச்சையரிசியே இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரட்நாயக்க ஒரு கிலோ அரிசி ஐம்பத்தி ஏழு ரூபா வீதம் கூட் டுறவுச்சங்கங்கள் அரச விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் ஊடாக விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவித்தார். இது குறித்து அமைச் சின் செயலாளர் ரட்நாயக்க மேலும் தெரிவித்தாவது,

நாட்டில் தற்போது போதியளவு அரிசி கையிருப்பில் உள்ளது. தேவை ஏற்பட்டால் மியன்மாரில் இருந்து மேலும் அரிசி இறக்குமதி செய்யப்படும்.

இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்வது குறித்து அமைச்சு மட்டத்தில் பேச்சுவார்த் தைகள் தொடர்ந்து இடம்பெற்றுவரு கின்றன என்றார். (அ)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடந் தோறும் உடுபுடவைகள் வழங்கும் நிகழ்வில் இவ்வருடம் ஆச் சிரமத்தை அண்டியுள்ள முதியவர்களுக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டன. உடுபுடவைகள் பெற்றுக்கொண்ட முதியவர் களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

# மீன் பார்வை

# நோத்முதல் கோபல்லவா வரை (8)



## ஆங்கிலேயர் இலங்கையைப் பிடித்தமை

க.சி.குலரத்தினம்

மேஜர்பிறேசர் தலைமையில் 15.9.1795 இல் மட்டக்களப்பைக் கைப்பற்றுவதற்கு ஒரு படை அனுப்பப்பட்டது.

பிறேசர் 17.9.1795 இல் மட்டக்களப்பையடைந்து முற்றுகையிடுவதன் முன் அங்கு நின்ற ஒல்லாந்தரின் சுதேசிப் படைகள் ஓடிவிட்டார்கள். எனவே பிறேசர் மட்டக்களப்பை இலகுவில் கைப்பற்றினான். அவ்விடத்தைக் காவல் செய்யுமாறு தனது படைகளிற் சிலரை நிறுவிவிட்டு அவன் திருகோணமலைக்கு மீண்டு பருத்தித்துறையைப் பிடிக்க ஒழுங்குசெய்தான். பருத்தித்துறையைப் பிடிப்பதற்குச் சென்ரூறியன் என்ற கப்பலில் 24ஆம் திகதி புறப்பட்டு 27 ஆம் திகதி அவ்விடத்தை அடைந்தான். பருத்தித்துறையைப் பிடித்த பின் அங்கிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றான். மூன்று மணி நேரத்தில் யாழ்ப்பாணம் சரணாகதியடைந்தது. யாழ்ப்பாணத்தின் சரணாகதி ஒப்பந்தம் 28.9.1795 இல் ஒரு மணியளவில் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் காவல் காரணமாக 55 ஐரோப்பியரும் 97 சுதேசிகளும் 22 அதிகாரிகளும் இருந்தார்கள். ஊர்காவற்றுறையில் உள்ள கமின்கீல், பூநகரிக் கட்டடம், கச்சாய்த்தீவு, வல்வெட்டித்துறை என்பன காவலழிந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து ஸ்ரூவாட் மன்னரைப் பிடிக்க ஒழுங்குசெய்தான். கேணல் பாபற் தலைமையில் படைகள் 30.9.1795 இல் புறப்பட்டனர். அவர்கள் 6.10.1795 இன் மன்னாரை மிக இலகுவில் போரிடாமலே கைப்பற்றினர். இதற்குள் பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு மீண்ட படைகளில் ஒரு பகுதியினர் வழியில் உள்ள முல்லைத்தீவைப் பிடித்தனர். அதனால் வன்னியர் நாடும் கைப்பற்றப்படலாயிற்று. மன்னாரில் இருந்த கப்ரின் புவுசர் கற்பிட்டியை 13.11.1795 இல் கைப்பற்றினான். இவ்வாறாக மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய இடங்கள் யாவும் 1795ஆம் ஆண்டு கழியுமுன் ஆங்கிலேயர் வசமாயின. ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் ஆனந்தமடைந்தனர். அவர்கள் நீண்டகாலங் கண்டு வந்த கனா நனவாயிற்று.

இவ்வாறாக இனி கொழும்பை எவ்விதம் கைப்பற்றலாம் என ஆங்கிலேயர் யோசித்தார்கள். கொழும்பில் இருந்த ஒல்லாந்த தளபதி வான் ஏஞ்சல்பிக் எது வந்தாலும் வரட்டும். ஆங்கிலேயரை இறுதிவரை எதிர்ப்பேன் என வீரம்பேசி நின்றான். அவனுக்கு உதவியாக டிமோறனுடைய கூலிப் படைகள் அங்கே இருந்தனர். டிமோறன் படைகள் சரித் திரப் பிரசித்தி பெற்றவராததால் அவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடல்பொருத்தமானதாகும்.


கவுண்ற் சாள்ஸ் டானியல் டி மோறன் என்பார் ஒரு சுவிற்சர்லாந்து வாசி. அவரிடம் கூலிப்படைகள் இருந்தனர். அவர் அப்படைகளை 1881 ஆம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தரின் தேவைக்குப் பணித்து வந்தார். அப்படைகளை ஒல்லாந்தர் 1886 ஆம் ஆண்டு தொடக்கமாக நிரந்தரமாக இலங்கையில் வைத்திருந்தனர். மோறன் தனக்குச் சொந்தமான படைகளை இலங்கையில் தனது தம்பியார் கேணல் பியறி பிரடரிக் டி மோறன் பொறுப்பில் விட்டு ஐரோப்பாவுக்கு மீண்டார். அங்கே ஸ்கொத்லாந்து வாசியாகிய கூ கிளேகோன் என்ற பேராசிரியரின் நட்பு அவருக்கு ஏற்பட்டது. கிளே கோன் அவர்கள் மோறனுடைய படைகளை ஆங்கிலேயருக்குச் சேவை செய்ய மாற்றிவிட்டார். மோறனும் மிக மகிழ்ச்சியோடு சேவை மாற்றத்தைச் செய்துகொண்டார்.

புதிய மாற்றத்தின்படி மோறன் படைகளுக்கு ஒல்லாந்தர் கொடுக்க வேண்டிய நிலுவைப் பணத்தை ஆங்கில அரசாங்கம் கொடுக்கவும், அப்படையினரின் பழைய சேவைகளையும் ஆங்கிலேயர் தமக்குச் செய்த சேவையெனக் கணித்துக் கொள்ளவும், டி மோறன் கிளேகோனுடன் இந்தியாவுக்கு ஒப்பந்தம் எழுதுவதற்குப் போகவும், அவருடைய செலவுகளை ஆங்கிலேயர் பொறுத்துக் கொள்ளவும் அவருக்கு வேதனமாக 500 பொன் கொடுக்கவும் ஆங்கிலேயர் உடன்பட்டனர்.

கிளேகோன் செய்த படை மாற்றமும் தந்திரோபாயமும் ஆங்கிலேயருக்குச் சாதகமாயிருந்தன. எனவே ஆள்பதி கோபாட் பிரபு அஜி நியூவை மீண்டும் கொழும்பில் இருந்த வான் ஏஞ்சல் பிக் தளபதியிடம் அனுப்பினர். இம்முறை சாதகமான ஒப்பந்தங்களும் கடிதங்களும் பலவாக இருந்தன. அஜிநியூவிடம் ஒப்பந்தங்களும் உத்தரவுக் கடிதங்களும் எத் தன்மையாக இருந்த போதிலும் இலங்கையில் இருந்த ஒல்லாந்த சங்கத்தின் பணிக்காயர்கள் ஒன்பது பேரில் ஆறுபேர் ஆங்கிலேயர் படைகளை வரவேற்க மறுத்தனர். ஆள்பதி வான் ஏஞ்சல்பிக் அவர்களும்அந்த ஆறு பேர் பக்கமே தமது வாக்கையும் அளித்தான். இதனால் அஜிநியூவின் தூது இரண்டு முறை பயனளியாமையால் சென்னையில் இருந்த ஆள்பதி இனிப் பேச்சுவார்த்தையில் பயனில்லை பல பிரயோகம் தான் ஏற்ற வழி எனக் கூறினார். (தொடரும்)

# கல்வியும் ஆசிரியத்துவமும் 4

## பேராசிரியர் அ. துரைராஜாவின் நினைவுப் பேருரை



பேராசிரியர் க.கந்தசாமி
பீடாதிபதி,
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

அதில் குக்கிராமம் தொட்டு நகரம் வரை உள்ள பாடசாலை ஆசிரியர்கள் பங்கெடுக்கின்றனர். அவற்றில் ஆசிரியர்கள் தவறாது பங்கெடுக்க வேண்டும் எனவும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இவற்றின் மூலம் ஆசிரிய வாண்மை விருத்தி அடைவதாக பிரசாரம் செய்யப்படுகிறது. அதற்கு அடையாளமாக ஆசிரிய கல்வி விருத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் அவற்றை மாணவர் களுக்கு நடைமுறைப்படுத்திக் காட்ட அனைத்து பாடசாலையிலும் வசதிகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதனால் ஆசிரியர்கள் அடையும் ஆசிரிய வாண்மை என்பது ஆசிரியர்களுக்குள்ளேயே அடங்கி விடுகின்றன.

இன்று குறிப்பிட்ட துறையில் புலமையும், பயிற்சிகளும் பெற்ற ஒருவர் தனது அறிவை தன்மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆவலோடு ஆசிரியத் தொழிலில் இணைந்து கொள்கிறார். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் அவர்களின் ஆற்றலுக்குப் பொருத்தமான வகுப்புக்கள் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. உதாரணமாக விஞ்ஞானப் பட்டதாரி ஒருவருக்கு பாலர் வகுப்புக்களே கற்பிப்பதற்குரிய வகுப்பாக ஒதுக்கப்படுவதை இங்கு குறிப்பிடலாம். இதனால் நாம் எதிர்பார்க்கும் ஆசிரிய வாண்மை என்பதை நாமே அர்த்தமற்றதாக்கி விடுகிறோம். இதையெல்லாம் நாம் ஆசிரியரின் குற்றமாகப் பார்க்க முற்படக் கூடாது.

இறுதியாக மிகுந்த பெருமிதத்துடன் இந்த நிகழ்வில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த யுத்த சூழலில் பல இடர்கள், பல இடப்பெயர்வுகள் மத்தியில்தான் எமது பிரதேச கல்வி வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் யாழ்ப்பாணத்தைத் தனித்து அடையாளப்படுத்தும் கல்விப் பாரம்பரியம் இத்தகைய இடர்பாடுகளின் மத்தியிலும் தொய்ந்து போனதாக எனக்குத் தெரியவில்லை. இதற்கு ஆசிரியர்கள் பலரின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவை முக்கிய காரணம் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. அதாவது பெற்றோரும், பிள்ளைகளும் கல்வியில் காட்டிய அக்கறை மட்டுமல்ல ஆசிரியர்களது கற்பித்தல் திறனும், சேவை மனப்பான்மையும் முக்கிய காரணமாகும். இவைகள் எல்லாம் அசாதாரண சூழ்நிலையிலும் ஆசிரிய சமூகம் படைத்துவரும் மகத்தான சாதனைகளாகும். இதுதான் வலுவான ஆசிரியத்துவத்தின் குறிகாட்டி எனலாம். மேலும் ஆசிரியத்துவத்தின் இப்படியானதோர் நிலையை ஊக்குவிப்பதைத்தான் பேராசிரியர் தனது இறுதிக் காலத்தில் இலக்காகக் கொண்டிருந்தார். எனவே இச் சாதனைக்குரிய யாழ்ப்பாண ஆசிரிய சமூகம் இந்த நன்னாளில் பெருமிதம் கொள் ளலாம் என்று கூறுவதுடன் ஆசிரியத்துவத் துடன் சேர்ந்த இன்னுமோர் பிரதானமான விடயத்தையும் இங்கு கூற விரும்புகின்றேன்.

ஆரம்ப காலத்தில் மனிதனொருவன் அறிவுப் பசியைத் தீர்க்கவும், புதிய விடயங்களை அறியும் ஆவலாலும் கல்வி கற்றான். பிற்காலத்தில், இவற்றுடன் சமூகத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்காகவும் தொழில்நுட்ப வசதிகளை அறிந்து கொள்ளவும் கல்வியைக் கற்க ஆரம்பித்தான். இன்று உலக பொருளாதாரம் அறிவு அடிப்படையானது. அறிவடிப்படியான உலகத்தில் சிறப்பாக வாழ்வதற்கு மனிதனொருவன் அறிவுடன் இன்னும் பல திறன்களையும் உடையவனாக இருக்க வேண்டும். இவற்றுள் சில திறன்கள் மனிதனுடன் உடன் பிறப்பவை. ஏனையவை அவன் கற்கும் காலத்தில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. குறிப்பாகத் தொடர்பாடற் திறன், குழுவாகத் தொழிற்படும் திறன், தலைமைத்துவத் திறன், தாமாக புதியவற்றை தேடும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், முடிவுகள் எடுக்கும் திறன், பொறுப்பேற்கும் தன்மை போன்றவை பாடசாலைகளால் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. இதுதான் கல்வியின் பிரதான நோக்கமாகும். ஆசிரியத்துவம் இதனை வரவேற்குமென நம்புகின்றேன். எனவே மதிப்புக்குரிய ஆசிரியர்களே பாடசாலைகளில் கல்வியைக் கற்பிக்கும் முறைகள் இவற்றை வளர்ப்பவையாக அமைய வேண்டும். கற்பிக்கும் முறைமை ஆசிரியரை மையப்படுத்தாமல் மாணவர்களை மையப்படுத்துவதாக, குழுவாக அறிவைத் தேடுதலை ஊக்கப்படுத்துவதாக அமையின் மேற் குறிப்பிடப்பட்ட திறன்கள் வளர்த்தெடுக்கப்பட வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு வகுப்பு மாணவர்கள் நாலு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒரு விடயத்தைக் குழுவாகக் கற்கச் சந்தர்ப்பம் உண்டாக்கும் போது, குழுவாகக் கற்றவற்றை ஏனைய குழுக்களுடன் பகிரத் தூண்டும்போது மேற்குறிக்கப்பட்ட திறன்களை மாணவர்கள் தாமாகவே வளர்த்தெடுக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். மேலும் வெளிக்களப் பயிற்சிகளினூடாகவும் ஆய்வுகூட கற்கைமுறைகள், பாடத்திட்டத்திற்கு புறம்பான சில பாடசாலை செயற்பாடுகள் ஊடாகக் கூட இத் திறன்களை வளர்க்க முடியும். ஆசிரியர்களே பாடத் திட்டக் கல்வியுடன் தொழில் வாய்ப்புத் தேவையான மேற்கூறப்பட்ட திறன்களையும் சேர்த்து மாணவர்களுக்கு ஊட்டும் போதுதான் மாணவர்கள் கல்வியின் உச்சக்கட்ட பயனைப் பெறுவார்கள். மேலும் இத்திறன்களை கற்றலினூடாக வளர்த்தெடுப்பது காலத்தின் தேவையாகும், அத்துடன் எமது கடமையுமாகும். ஆசிரியத்தின் சீரிய பணியுமாக அமையுமெனலாம்.

நவீன கல்விக் கொள்கைகள், பாடசாலையொன்றின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னேற்றகரமானதாக அமைய வேண்டுமெனில் இச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தம்மைப் பற்றி தமது செயற்பாடுகள் பற்றி சுயமதிப்பீடு செய்தல் அவசியம் என்று வலியுறுத்துகின்றன. ஆசிரியர்களே, உங்கள் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடையதாகவும் விளைதிறன் கூடியதாகவும் இருப்பதற்கு நீங்கள் உங்கள் கற்பித்தல் செயற்பாடு பற்றியும் நீங்கள் பொறுப்பாக உள்ள வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பற்றியும் தரவுகள் அடிப்படையிலான சுயமதிப்பீடு செய்தல் மிகவும் அவசியம். ஆசிரியன் ஒருவன் தன்னைப் பற்றி சுயமதிப்பீடு செய்யும் போது அவன் தனது பலத்தையும் பலவீனத்தையும் எடைபோடக் கூடியவனாக இருப்பான். ஆசிரியத்தை மதிக்கும் ஆசிரியன் ஒருவன் தானாகவே தனது பலவீனத்தை நீக்க முயற்சிப்பான் என்பதில் வேறு கருத்து இருக்கமுடியாது. தனது பலம், பலவீனத்தை உணர்ந்து கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாலும் தனது பலவீனத்தை சீர்செய்வதற்கு முயற்சிப்பதனாலும் வகுப்பில் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னேற்றகரமானதாக்கலாம். வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளின் குறை நிறைகளையும் அறியமுடியும். இதன்மூலமும் வகுப்புக்கான கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிடுவதன் மூலமும் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சிப்பதன் மூலமும் நிறைவுகளை கற்பித்தலுக்கு சாதகமாக்குவதன் மூலம் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த முடியும். பாடசாலையின் ஒட்டுமொத்தமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைப் பற்றியும் தரவுகள் அடிப்படையிலான மதிப்பீடுகள் செய்தலும் மிகவும் அவசியமாகும். இந்த மதிப்பீடு அதிபரினால் மட்டுமோ அல்லது அதிபரும் பிரதி அதிபர்களும் சேர்ந்த சிறியதோர் குழுவால் மட்டுமோ செய்யப்படல் பயனுள்ளதாக அமையாது. ஆசிரியர் குழுவொன்று இம் மதிப்பீட்டை செய்வதுதான் நல்லது. இக் குழுவில் முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தக் கூடிய கனிஸ்டதர ஆசிரியர்களும் இருக்க வேண்டும். வருடா வருடம் இவ் வகையான மதிப்பீடுகளைச் செய்து பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலம் வினைத்திறனும் விளைதிறனும் உடைய பாடசாலையாக மாற்றமுடியும். இன்னோர் விடயத்தையும் நவீன கல்விக் கொள்கைகள் வலியுறுத்துகின்றன. இது யாதெனில் ஆசிரியர் ஒருவரின் கற்பித்தல் செயற்பாடு அவரின் சக ஆசிரியர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்பட்டு அறிவுறுத்தப்படலாகும். எமது சமூகத்தில் இது மிகவும் கடினமானதோர் விடயமாகும். இவ்விடயத்தைச் செயற்படுத்தக் கூடிய மனப்பக்குவம் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படின் இலங்கையின் கல்வி வரலாற்றில் முன்னேற்றகரமான மாற்றம் என்று கூறமுடியும். ஆசிரியர்களே நல்ல ஆசிரியத்துவத்தைப் பேணுவதற்கு இவ் விடயத்தில் உங்கள் கவனம் செலுத்தப்படும் என நம்புகின்றேன். இதுதான் அமரர் கனவு கண்ட எமது சமூகத்தின் கல்வி உயர்ச்சிக்கும் அமரர் நேசித்த ஆசிரியத்துவத்தின் மேன்மைக்கும் நாம் செய்யும் பணியுமாகுமெனக்கூறி எனது கடமையைச் சரியுறச் செய்த மன நிறைவுடன் முடிக்கின்றேன். (முற்றும்)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடாத்துவதற்கான முறையியல்

## (Methodology for Conducting the workshop)

தற்போது வளவாளர்களால் நடத்தப்படும் செயலமர்வுகள் ஆக்கபூர்வமற்றதாகவும், அலுப்புத் தட்டுவதாகவும், உயிர்த்துடிப்புடன் காணப்படாததாகவும் போன்ற பல விமர்சனங்கள் பத்திரிகை வாயிலாகவும், செயலமர்வுகள் முடிவில் மறைமுகமாக இடம்பெறும் விமர்சனங்கள் மூலமும் அறிய வருகின்றது.



ஏ.சி. ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

செயலமர்வுகள் சிறப்பானதாக அமைய வளவாளர்களது சிறப்பான செயற்பாடுகளும் பங்கு பற்றுபவர்களின் ஒத்துழைப்பும் அடிப்படையில் அவசியமானதாகும். ஆனால் இதற்கு மேலாக சில அடிப்படை விடயங்கள் செயலமர்வு ஒன்றின் போது பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வளவாளர்கள் பலர் மறந்து விடுவதினால் மேற்படி பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஒரு செயலமர்வின் போது பெரும்பாலும் பாடரீதியாக ஆசிரியர்கள் அழைக்கப்படுவது வழக்கம். அவ்வாறு அழைக்கப்பட்ட போதும் பாடத்துறை சார்ந்த விடயங்களல்லாது கற்பித்தல் முறையியல் மற்றும் ஏனைய விடயங்கள் சார்ந்தே செயலமர்வுகள் அதிகளவில் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன. முற்றிலும் பாடத்துறை சார்ந்தபாட மேம்பாடுடன் தொடர்பு பட்டதாயின் அது பல்கலைக்கழக ஆசிரியர்களைக் கொண்டே நடத்தப்படுவது சிறப்பானது. எப்பாடமாயினும் சிறப்பான வளவாளர்கள் செயலமர்வின் இலக்கினை புரிந்து கொண்டால் பாடப் பொருத்தமின்றியும் செயலமர்வுகளை நடத்த முடியும். அவ்வாறு நடத்தப்படும் இடத்து, வளவாளர்கள் பின்வரும் முறையியலை (methodology) பின்பற்றவேண்டும். இம்முறையியலை பின்பற்றாமையும் முறையியலை புரிந்து கொள்ளாதவர்களும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

ஒரு வளவாளர் ஒரு செயலமர்வுவொன்றின் போது பின்வரும் நடிபங்குகளை செயலமர்வில் ஆற்ற வேண்டும். மொடறேட்டராக உதவுபவராக, துணை புரிந்து வழிப்படுத்துபவராக செயலாற்ற வேண்டும். (The resource persons have to be moderators, facilitators, supports and Guides in the workshops) அத்துடன் செயலர்வில் பங்கு பற்றுபவர்கள் அனைவரும் வயது வந்தோர் (Adults) என்பதனை மனதிலிருத்த வேண்டும். இதனால் செயலமர்வின் போது (Androgogi) முறையியலை பயன்படுத்த வேண்டும். வளவாளர் padegogy யினை அறிந்திருப்பாராயின் அது வயது வந்தோர் பங்கு பற்றும் செயலமர்விற்கான பொருத்தமான முறை அல்ல. மல்கம் நோல்ஸ் என்ற கல்வியலாளரின் (Malcom knowles) கருத்துப்படி செயலமர்வில் பங்கு பற்றுபவர்கள் வயது வந்தோர் (Adults) ஆகையால் Androgogical principles முறையியலை அங்கு பின்பற்ற வேண்டும்.

இத்தகைய முறையியலை பின்பற்றாமையே செயலமர்வுகள் செயற்றிறன் அற்றதாக அமைகின்றன. (when all the participants are adults, Androgogical principles are followed, According to Malcom knowles)

மல்கம் நோல்ஸ் என்பவரின் Androgogical முறையியலில் ஆசிரியர்களிடம் பின்வரும் நிலைமைகள் காணப்படும் எனக் கூறுகின்றார்.

❖ **வயது வந்தோர் தானாக செயற்படுவதுடன் சுயமாகவே தம்மை நெறிப்படுத்துவர். (Adults are Autonomous and self directed)**

❖ **அவர்களிடம் அனுபவமும் அறிவும் ஏலவே நிறைந்து இருக்கும். புதிய கற்றலையும் அறிவையும் அனுபவத்தினையும் பழையவற்றுடன் தாமே தொடர்பு படுத்துவர்.**

❖ **வயது வந்தோர் இலக்குடன் கூடியவர்கள் . எந்த கற்றலையும் வழமையாக அவர்களால் காரணம் காண முடியும்.**

❖ **வயது வந்தோர் தகுதியுடையோர்.**

மேற்படி Androgogical principles அடிப்படையில் வளவாளர்கள் தமது செயலமர்வுகளை நடத்துமிடத்து குறைவான பிரச்சினைகளே எழ இடமுண்டு. மேலும் பங்கேற்பு அடிப்படையிலான செயலமர்வாக (participatory approach) அதனை நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தும் போது செயலமர்வில் பங் கெடுப்பேோர் சமமானவர்கள் என்றும், அவர்களது கருத்துக்களுக்கு இடமளிப்பதுடன், அவர்களது வேறு வேறான அனுபவங்களை தனியாகவும் குழுவாகவும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். நீண்ட விரிவுரைகளுக்குப் பதிலாக கலந்துரையாடல், விவாதம், அனுபவங்களைப் பகிர்தல் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் என்பனவற்றையும் பிரயோகித்தல் சிறப்பானதாகும்.


செயலமர்வு ஒன்றின் போது அதன் இலக்கும் நோக்கமும் (objectives) தெளிவாக அமைக்கப்பட்டிருத்தல் அவசியம். புதிய அறிவினை பழைய அறிவுடன் பொருத்தும் விதம் செயற்பாடுகளினூடாக பரிணமிக்க வேண்டும். செயற்பாடுகளினூடாக வெளிவரும் பல்வேறு அபிப்பிராயங்கள், கருத்துக்கள் என்பவற்றிடையே பொது தொடர்பினை வளவாளர் உரு வாக்க வேண்டும். (make connections between various opinions and ideas) கற் றல் என்பது ஒருவரிடம் நிலைமாற்றம் மொன்றை ஏற்படுத்துவது அவசியம். (Trans formation) அத்தகைய நிலைமாற்றம் ஒன்று செயலமர்வுகளில் இடம் பெற வேண் டுமாயின் கேட்லெவினின் (kurt levin) கற் றல் அனுபவ வட்ட கோட்பாட்டினையும் வள வாளர் பிரயோகிக்கவும் அதன் தத்துவ பின்னணியினை அறிந்தவராகவும் இருப்பது தேவையானதே கேட்லெவினின் அனுபவக்கற்றல் வட்டம் (Experientian learning Cycle) செயலமர்வு ஒன்றின் போது கடைப்பிடிக்க வேண்டிய பங்கேற்பு முறைகளை விளக்குகின்றது. குறிப்பாக வயது வந்தோருக்கான (Adults) செயலமர்வின் போது வேறு எந்த மாதிரியினையும் விட இது சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

(Experience considered as the Living Textbook of adults and Experential learning, like for any other successful learning- teaching model, is the base for participatory approach)

கேட்லெவின் அனுபவக் கற்றல் வட்டம் வயது வந்தோருக்கான சிறப்பான மாதிரியாகும். அனுபவக்கற்றல் மாதிரியானது இயல்பாக கற்றல் எவ்வாறு இடம் பெறுகின்றது என்பதனை விளக்குகின்றது. கற்போர் தமது முன்னைய அனுபவங்களுடன் புதிதாக கிடைத்த அறிவை இணைத்து பிரயோகிப்பர். முன்னைய அறிவிற்கும் புதிய அனுபவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் புதிதாக கிடைத்த தமது அனுபவம் குறித்த பிரதிபலிப்புக்களை (Reflect) முன்னைய அறிவுடன் ஒப்பிட்டு புதியதொரு கருத்தியலை(conceptualize) உருவாக்கிக் கொள்வர். இதனை அவர்கள் தமது Schemata வில் தன்மயமாக்கிக் கொள்வர். இதற்காக வளவாளர்கள் கற்போருக்கு போதியளவு செயற்பாடுகளை வழங்குவதுடன் விளக்கங்களையும் வழங்க வேண்டும்.

இறுதியாக கற்போரிடம் இவை சென்றடைந்துள்ளதா என் பதனை மதிப்பிடுவதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும். மீண்டும் மீண்டும் செயற் பாடுகளை வழங்கி செயற்பாடுகளூடாக புதிய அனுபவத்தினையும் அதன் பிரதிபலிப்புகளையும் தொடர்ந்து எண்ணக் கருத்தியலை தானே உருவாக்கிக் கொள்ளவும் அதனை பிரயோ கிக்கவும் முறையில் செயற்பாடுகள் அமையு மிடத்து அது ஒரு வட்டப் பாதையில் இடம் பெறும்.

**Experiential Learning Cycle (kurt Levin)**




இதனால் கற்றல் என்ப்து தொடர்ச்சியானதும் வாழ் நாட்களுக்குரியதுமாகும். கேட் லெவினின் இந்த கற்றல் அனுபவ வட்டம் வயது வந்தோருக்கான செயலமர்வில் உபயோகிக்கத் தக்க கற்றல் கேட்பாடாகும்.

மேற்படி எண்ணக்கருக்களை செயலமர்வில் ஈடுபடும் வளவாளர்கள் மற்றும் பங்கு பற்றுபவர்கள் மட்டுமன்றி செயலமர்வின் பங்குதாரர்கள் (Stake holders) அனைவரும் புரிந்து செயற்படின் செயலமர்வுகள் காத்திர

# ஆப்கானில் சிறை மீது தலிபான்கள் தாக்குதல் ஆயிரக்கணக்கான சிறைக்கைதிகள் தப்பிப்பு

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் அமைந்துள்ள காந்தஹார் மாகாணத்தில் தலிபான்கள் நடத்திய ஒரு பெரிய சிறை உடைப்புத்தாக்குதலை அடுத்து தப்பிச் சென்றவர்களை தேடிபிடிக்கும் நடவடிக்கை பெரிய அளவில் நடந்து வருகிறது.

இச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 350 தலிபான் கிளர்ச்சிக்காரர்கள் தப்பி விட்டதாக மூத்த ஆப்கானிய அதிகாரி ஒருவர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற கைதிகளை தேடிப்பிடிப்பதற்காக காந்தஹாரில் ஆப்கானிய பொலிஸார் வீடு விடாக தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். அப்பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நேட்டோ படையினர் அப்பொலிஸாருக்கு உதவியாக ஹெலிகொப்ரலில் வட்டமடித்து நகரிலும் அதனை ஒட்டிய இடங்களிலும் பாதுகாப்பை வலுப்படுத்தி வருகின்றனர்.

ஆனால் தப்பியவர்களில் எவரும் பிடிபட்டதாக இதுவரை தகவல்கள் இல்லை. எவருமே பிடிபடாமல் போகவும் வாய்புள்ளது என்று ஆப்கானிய அதிபர் ஹமீத் கர்சாயின் சகோதாரரும் காந்தஹார் மாகாண சபையின் தலைவருமான வாலி கர்சாய் தெரிவித்துள்ளார்.

கந்தாக சிறையின் முக்கிய நுழைவு வாயில் முன்பு ஒரு ரக்கில் கொண்டுவரப்பட்ட பெரும் குண்டுவெடித்து வாயிற்கதவை உடைத்து சிதறச் செய்தது. பின்னர் அதன் வழியாக சுமார் 30 தலிபான்கள் ஆயுத தாரிகள் அதிரடியாக சிறைக்குள் நுழைந்து சிறைக்காவலர் மற்றும் பொலிஸார் சுமார் 15 பேரைக் கொன்று குவித்துவிட்டு கைதிகளைச் தப்பிப் போகச் செய்துள்ளனர். தப்பியவர்களின் சிலர் தலிபானிய இயக்கத்தின் முக்கிய அங்கத்தினர் என்று நம்பப்படுகிறது. (அ)

# சாட் நாட்டின் நகர் ஒன்று கிளர்ச்சியாளர் வசம்

சாட் நாட்டில் சூடானுடனான எல்லைப் பகுதியில் 15ஆயிரம் தார்பூர் அகதிகள் அடைக்



கலம் புகுந்துள்ள காஸ் பெய்டா என்ற நகரை சாட் கிளர்ச்சிக்காரர்கள் தாக்கியுள்ளனர்.

அந்த நகர் சீக்கிரமே தங்களது படைகளிடம் விழுந்துவிட்டதாக கிளர்ச்சிப் படைகளின் தலைவர் கூறியுள்ளார். கடந்த பெப்ரவரியில் நிட்ஜ்மெனா நகரைத் தாக்கியதன்போது இருந்ததைத் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமான ஆட்பலமும் வாகனங்களும் தங்களிடம் இப்போது இருப்பதாக கிளர்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.


## உலக தரிசனம்

பெப்பரவரியில் அதிபர் மாளிகை வரை சென்று பின்னர் கிளர்ச்சிக்காரர்கள் பின்வாங்கியிருந்தனர். தலைநகரைக் காப்பதற்காக அரசு படையணிகள் திரட்டப்பட்டு வருகின்றன என்று சாட் தகவல்துறை அமைச்சர் மஹமது ஹிசைன் பிபிசியிடம் தெரிவித்தார். மேலும் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதம் வழங்கி ஒன்று திரட்டியிருப்பது சூடான் தான் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# ஈரானின் நிராகரிப்பு ஏமாற்றமளிக்கின்றது அமெரிக்க அதிபர் புஷ் அறிவிப்பு

(வோஷிங்டன்)

அணு ஆயுத திட்டத்தை கைவிடுவதற் கான புதிய யோசனைகளை நிராகரித்ததன் மூலம் சர்வதேச சமுதாயத்தில் இருந்து ஈரான் தன்னை



மேலும் தனிமைப்படுத்தி கொண்டதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

பாரீஸில் செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய புஷ் உலக வல்லரசுகள் முன்வைத்த பெருந்தன்மையான யோசனைகளை ஈரானின் தலைவர்கள் நிராகரித்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாக கூறினார்.

இவர்கள் முன்வைத்த யோசனையில் பொருளாதார சலுகைகள், அணு ஆயு தங்கள் தயாரிக்க மாட்டோம் என்று உறு தியளித்தால் அணுசக்தி ஒத்துழைப்பு வழங்குவோம் என்பது போன்ற திட்டங்கள் இடம் பெற்று இருந்தன.

எனினும் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு இருத்தரப்பும் ஒப்பு கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)



அண்மையில் சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்.பிரதேச செயலகத்தில் புகைத்தல் எதிர்ப்புதின ஆரம்பநிகழ்வின் போது சிகரெட் குவியலுக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடற் பணிப்பாளர் க.மகேஸ்வரன் எரியூட்டுவதையும் அருகே தலைமையக சமுர்த்தி முகாமையாளர் இ.கிருஷ்ணராசா முகா மைத்துவப் பணிப்பாளர் ம.கியூமன், நிர்வாக உத்தியோகத்தர் ந.பாலசுப்பிரமணியம், பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நினைவுப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 8 ஆம் ஆண்டு நிறைவை யொட்டி பின் வரும் தினங்களில் நினைவுப் பேருரைகள் காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பல் நோக்கு மாநாட்டு மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று திங்கட்கிழமை ''திருக்கோயில்களில் கலைகள்'' என்னும் தலைப்பில் முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக நடனத்துறைத் தலைவரும் இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரு மான திருமதி சு.ஸ்ரீமுரளிதரனும், நாளை ''தரணி போற்றும் தமிழ் இசை'' என்னும் தலைப்பில் மூதறிஞர் சொக்கன் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் சி.சூரியகுமாரும், 19 ஆம் திகதி வியாழக்கிழமை ''காலம் தோறும் தமிழ்க் கவிதை'' என்னும் தலைப்பில் பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ''ஆரம்பக் கல்விப் போக்குகளும் எதிர்கால அறைகூவல் களும்'' எனும் தலைப்பில் பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெ.இராசநாயகமும், 23 ஆம் திகதி திங்கட்கிழமை ''பாடசாலைகளுக்கான தலைமைத்துவம்'' என்னும் தலைப்பில் பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக் கழக வணிகவியல் பீட, பீடாதிபதி கே. தேவராஜாவும் நிகழ்த்துவார்கள். (அ)

# புத்தாக்கப் போட்டி முடிவுகள்

E.S.பேரம்பலம் சக நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நடைபெற்ற யாழ்.கல்வி வலயத்தின் புத்தாக்கப் போட்டியில் மாவட்ட மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு,

**கனிஷ்ட பிரிவு (தரம் 6-9)**

**முதல் மூன்று இடங்களைப் பெறுவோர்**

தி.பானுஜா -சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பி.டினேசன் -யாழ்.இந்துக்கல்லூரி, ஜெ. வோல்டர் ஜெபா.பிரசாந்த் -சென் ஜோன்ஸ் கல்லூரி.

**கனிஷ்டபிரிவில் ஊக்குவிப்புப் பெறுவோர்**

டி.தர்சாந்தன் -சென்ஜோன்ஸ் கல்லூரி, பி.ரினுகாந்த்-சென்பற்றிக்ஸ் கல்லூரி, கெ.ரஜீவன் -கனகரத்தினம் ம.ம.வி., அ.டனிஸ்குமார், ம.கனிஸ்ரன்-சென்ஜேம்ஸ் ம.வி., சி.சிவமைந்தன், ஜி.ஏபிரஹாம் அனோஜன், என். மதுசன், எஸ்.சுபன்-சென்ஜோன்ஸ் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு (தரம் 10-13)**

**முதல் மூன்று இடங்களைப் பெறுவோர்**

த.கடோற்கசன்-யாழ்.மத்தியகல்லூரி, க.சோபிதா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, க.சோபிதா -சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவில் ஊக்குவிப்பு பெறுவோர்**

எம். அன்டன்ராஜ், வி.ஏ.ஷெரோன்-சென் பற்றிக்ஸ் கல்லூரி, வி.சிந்துஜா -சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கு.மோகனக்கிருஷ்ணா-யாழ்.மத்திய கல்லூரி, பி.நதீசன்-சென் ஜோன்ஸ் கல்லூரி, நா.விமலேந்திரா, பா.பாலகிரிசன்-கொக்குவில் இந்துக் கல்லூரி.

இதேவேளை இலங்கைப் புத்தாக்குனர் கழகத்தினால் யூன் மாத முதல் வாரத்தில் நடைபெறுவதாக இருந்து தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்ட யாழ். மாவட்ட மட்ட சகல பிரிவினருக்குமான புத்தாக்கப் போட்டிகள் யூலை மாத நடுப்பகுதியில் நடைபெறுமென வடமாகாணத்திற்கான புத்தாக்குனர் கழக இணைப்பாளர் தெரிவித்துள்ளார் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (அ)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினால் புன்னாலைக்கட்டுவன் கருமாரி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் மாலை 3 மணி தொடாக்கம் 4 மணி வரை நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவுகளில் இன்று ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' எனும் விடயத்தில் சிதம்பரநாதன் சசீவனும், நாளை ''வணங்காத் தலைவந்து எனக்கிங்கன் வாய்த்ததுவே'' எனும் விடயத்தில் சைவப்புலவர் நா. நவராஜும் சொற்பொழி வாற்றவுள்ளனர். (அ)

## இரதோற்சவம்

(சாவகச்சேரி)

இரஞ்சியம்பதி மண்டுவில் சோலை மன்னன் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தில் இரதோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. புதன்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

◆◆◆

கல்வயல் சாவகச்சேரியில் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தில் தேர்த் திருவிழாவானது நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள் ளது. புதன்கிழமை காலை தீர்த்தோற்சவம்

## சர்வமத இன்னிசை நிகழ்வு

வடபிராந்திய ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனத்தின் சர்வமத இன்னிசை நிகழ்வு 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் கத்தோலிக்க திருச்சபை ஆண்டகை பேரருட்திரு.தோமஸ் சௌந்தர நாயகம், இலங்கைத் திருச்சபை குருமுதல்வர் வணபிதா எஸ்.பி.நேசகுமார், யாழ். தென்னிந்திய திருச்சபை ஆதீன பாதிரி கலாநிதி டி.எஸ். தியாகராஜா, ஜனாப் மௌலவி ஐ.எம்.பாகீர், ஜனாப் மௌலவி ஏ.ஜி. எம்.இர்பான், காயத்ரி பீட வேத சிவாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை யாழ்.மாவட்ட நீதிபதியும் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிறுவன தலைவருமான ஸ்ரீ.இ.வசந்தசேனன் நிகழ்த்தவுள்ளார். (அ)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு கந்தர்மடம் பலாலி வீதி இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் நடைபெறவுள்ளது. (அ)

## யாழ்.செய்திகள்

## வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி

கொக்குவில் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று முற்பகல் 9மணிமுதல் 10.30 வரை நேதாஜி சனசமூக நிலையம், பொற்பதி வீதி, கொக்குவில் உடையார் வீதி, கொக்குவில் கலைவாணி மில் வீதி ஆகிய இடங்களிலும் முற்பகல் 10.45 மணி முதல் 12.15 வரை கோணாவளை வீதி, கொக்குவில் சாயிதுர்கா கோவிலடி, கொக்குவில் செம்பாட்டு வீதி ஆகிய இடங்களிலும் பிற்பகல் 12.30 மணிமுதல் 2 மணிவரை கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு நாமகள் பாடசாலை வீதி, கொக்குவில் கிழக்கு குளங்கரைவீதி ஆகிய இடங்களிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கான மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் யா.நக்கீரன் அறிவித்துள்ளார். (அ-6)

◆◆◆

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை ஸ்ரான்லி வீதியிலுள்ள புகையிரத விடுதியிலும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 வரை அத்தியடி பிள்ளையார் கோவிலடியிலும் வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (அ-6)



ஊர்காவற்றுறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புதிய தேவா கலைகலாசார மன்றத்தை யாழ்.மாவட்ட அமைப்பாளர் உதயன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# விற்பனைக்குள்ள உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்பு !

(யாழ்ப்பாணம்)

நிவாரணப்பொருட்கள் வந்து சேரததால் யாழ்.குடாநாட்டில் இரண்டு மாத காலமாக வழங்கப்படாதிருந்த நிவாரணப்பொருட்களை விற்பனைக்காகவுள்ள உணவுப் பொருட்களின் மூலம் உடன் வழங்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.


அமைச்சரைச் சந்தித்த இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தங்களுக்கான நிவாரணங்கள் சித்திரை மாத்திற்குப் பின்னர் இதுவரையில் கிடைக்கவில்லை என முறைப்பாடு செய்துள்ள நிலையிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன்பிரகாரம் மே, யூன் ஆகிய இரு மாதங்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகமும், மே,யூன் ஆகிய இரு மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரண விநியோகமும் இம் மாதம் 20ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்களின் மூலம் வழங்கப்படும்.



மேற்படி நிவாரணப் பொருட்களுக்கான வழங்கல்கட்டளை இன்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டபுனர்வாழ்வு மற்றும் புனரமைப்புச் செயலகத்தில் வழங்கப்படவுள்ளன.

அதேநேரம் நிவாரணங்களுக்கான பொருட்கள் வருவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையினால் மக்களின் நிலை உணர்ந்து விற்பனைக்காகவுள்ள உணவுப் பொருட்களையே இலவச நிவாரணமாக வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்திருப்பதால் அவசிய தேவை இருப்பவர்கள் இந் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதையும் சிவப்பு நாடு, தீட்டல் உடையல்அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய உணவுப் பொருட்களே தற்போதைக்கு வழங்கப்படுமென்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளார். (அ)



மாரீசன்கூடல் றோ.க. த.க. பாடசாலை வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட அதிபர் எஸ்.என்.உதயகுமார், பிரதம விருந்தினர் சிறுவர் பாதுகாப்பு கல்வித் திட்ட இணைப்பாளர் பி.செல்வறஜித், சிறப்பு விருந்தினர் பங்குத் தந்தை அருட்பணி எம். எம்.கே.ஞானேந்திரன் அடிகளார், கௌரவ விருந்தினர் கிராம அலுவலர் (ஜே/154) எஸ்.சூரியகுமார் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# சொற்றமிழால் சைவம் வளர்த்த அன்னை துர்க்கா துரந்தரிக்கு வலம்புரியின் அகம் நெகிழ் மலரஞ்சலி



## சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

சொற்றமிழால் சைவம் வளர்த்த தூய தமிழ்த் தாய்
நற்றவர்த்தோர் நாளும் துதி செய் நம் சிவத்தமிழ் அன்னை
வலம்புரியின் வரவு கண்டு வாயார வாழ்த்தி நின்ற
அறப் பணியின் இமயம் ஆதரவற்றோருக்கு அபயகரம்
அன்னை துர்க்கா துரந்தரிக்கு ஆயிரம் இடம்புரிகள் நடுவே
ஆண்டவன் அபிஷேகம் காணும் வலம்புரிச் சங்கு முழங்குகிறது
இறைவா எங்கள் அன்னைக்கு பேரின்பப் பெருவாழ்வு தந்துவிடு என்றே

ஓம் சாந்தி

வலம்புரிக் குடும்பம்

# நோர்வே சமாதான தூதர் கிளிநொச்சி செல்ல உரிய வேலைத்திட்டம் அவசியம்-சமாதானச் செயலகம்

(கொழும்பு)

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் கிளிநொச்சிக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமானால் அதற்காக உரிய வேலைத் திட்டம் அவசியம் என் அரசாங்க சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

செயலகப்பணிப்பாளர் ரஜீவ விஜேசிங்ஹ, றொய்ட்டர் செய்தி சேவைக்கு வழங்கியிருந்த செவ்வி தொடர்பில் எமது செய்திச் சேவை அவரிடம் வினவியது.

இதன் போது கருத்துரைத்த அவர் நோர்வே சமாதானத் தூதுவரான ஜோன் ஹன்சன் பவர் கிளிநொச்சிக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால் அவர் பேசப் போகும் விடயம் தொடர்பாக அரசாங்கத்திற்கு உரிய விளக்கம் அளிக்கப்படவேண்டும். அதனை விடுத்து பிரசாரத்திற்காக மாத்திரம் இந்த விடயத்தை அரசாங்கம் அனுமதிக்காது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நோர்வே விரும்புமாக இருந்தால் அந்தப் பேச்சு வார்த்தை முன்னோக்கி நகர்த்தி செல்லக்கூடிய பேச்சுவார்த்தையாக அமைவது அவசியம் எனவும் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் நோர்வே இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பாட்டாளராக செயற்படுவதாகவும் அவர் இதன் போது சுட்டிகாட்டினார். (அ)

# அரிசி ஏற்றுமதியைக் குறைப்பதற்கு கட்டணத்தைக் கூட்டியது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதைக் குறைக்கும் நோக்கில் ஒரு மெற்றிக்தொன் அரிசி ஏற்றுமதி செய்வதற்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டுவந்த குறைந்தளவு கட்டணத்தை ஒரு இலட்சம் ரூபாவாக உயர்த்தியுள்ளது.

வெளி நாடுகளிலிருக்கும் இலங்கைப் பிரஜைகள் பயன்படுத்துவதற்காக தற்பொழுது இலங்கையிலிருந்து மாதாந்தம் 200 மெற்றிக் தொன் அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் அமைச்சரவை இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்தது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

சர்வதேச சந்தையுடன் ஒப்பிடும் போது உள்நாட்டில் அரிசி விலை அதிகமாக இருப்பதால் அரிசி ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தும் யோசனைகள் அடங்கிய பிரேரணையொன்றை பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அமைச்சரவையிடம் சமர்ப்பித்தார் என பிரியதர்ஷன யாப்பா கூறினார். உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் 2007ஆம் ஆண்டு இருந்ததைவிட தற்பொழுது அரிசியின் விலை 2 மடங்காக அதிகரித்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

அரிசி ஏற்றுமதிகளைக் குறைப்பதற்கு பல்வேறு நாடுகள் பல்வேறு விதமான உத்திகளைக் கையாள்வதாக பதில் நிதியமைச்சரின் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் அரிசியை உள்ளூர் சந்தையில் போதியளவு கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கையே இதுவெனவும் தெரி வித்தார். (அ)

# பேச்சுக்கு ஆயுதக்களைவை நிபந்தனையாக விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம்-சிறிகாந்தா

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன் நிபந்தனையாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென ஜனாதிபதி கூறுவது நடைமுறைச் சாத்தியமற்றதொன்றென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் மீண்டும் சாமதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமாயின் அவர்கள் ஆயு தங்களை கைவிட வேண்டும் என ஜனாதிபதி கூறியிருப்பது தொடர்பாக சிறிக்காந்தா மேலும் கூறுகையில்,

ஆயுதமோதல் ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ள எந்தவொரு தரப்பும் ஆயுதங்களைக் கைவிடுவது என்பதும் சரணடைவது என்பதும் நடைமுறையில் ஒன்றே. ஆயுத மோதல் ஒன்றில் ஈடுபட்டு வந்திருக்கும் போராட்ட அமைப்பு ஒன்று ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்கு சென்றதாக வரலாறு கிடையாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வுகாண முடியாது என்பதை கடந்த இருபத்தைந்து ஆண்டுகால வரலாறு நிருபித்து நிற்கிறது. இந்த யதார்த்தம் அது ஒரு வேளை கசப்பாக இருந்தாலும்கூட முதலில் உணரப்படவேண்டும்.

பயங்கரவாதம் என்பது நாடு முழுவதும் வியாபித்திருக்கும் நிலைமையில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து மட்டுமன்றி அரசாங்கத்தரப்பிலிருந்தும் பயங்கரவாதம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்பதும் வெளிப்படையானது. இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது ஒன்றும் இயலாத காரியமல்ல.

போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வந்து திட்டமிட்ட குறுகிய கால வரையறைக்குள் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிக்க முடியும். இலங்கை ஒரே நாடு என்ற அரசியற் கட்டமைப்புக்குள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளை எவ்விதம் திருப்திப்படுத்துவது என்பது தான் கேள்வி.

இது ஓர் அரசியற் சவால். இதனை நேர்மையோடும் துணிச்சலோடும் சந்திப்பதற்கு நாட்டின் அரசியற் தலைமை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தவறி வந்திருக்கின்றது. சாத்தியங்களைக் கையாளும் கலைதான் அரசியல் என்ற வரைவிலக்கணத்தை பின்பற்ற முனைந்தால் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான உகந்த அணுகுமுறையை அரசாங்கமும் அதன் தலைவரான ஜனாதிபதியும் வகுக்க முடியும். (அ)


# துரித கதியில் தொண்டமனாறு கடலேரி திட்டப்பணிகளை மேற்கொள்ள அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் நீண்ட காலத் தேவையாக இருந்து வரும் தொண்டமனாறு கடலேரித் திட்டப்பணிகளை துரிதகதியில் முன்னெடுக்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விஷேட செயற்பாட்டுக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

தொண்டமனாறு கடலோரித் திட்டப்பணிகளை உரிய முறையில் ஆரம்பித்து அதன் மூலம் அந் நீரினை நன்னீர் ஆக்குவது இதன் இறுதி இலக்காகும். இதன் மூலம் ஏனைய பகுதகளின் நீர் மாசடைவதைத் தடுப்பதும் கடற்தொழி லாளர்களின் தொழில் பாதிப்படையாத வகையில் சுயதொழில் முயற்சியாக இறால் பண்ணைகளை ஆரம்பித்து அதனை ஊக்குவிப்பதற்கும் பேணி விஸ்தரிப்பதற்கும் அதனூடாக கடற்தொழிலாளர்களின் வருவாயை அதிகரிபபதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

இதன்பிரகாரம் தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் வழிகாட்டலில் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின்மூலம் தொணடமனாறு கடலேரித் திட்டப் பணிகள் துரித கதியில் மேற்கொள் ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)



"பாலும் தெளிதேனும்" திருமுறைப்பாடல்களை பாடி இறுவெட்டாக வெளியிட்ட ஆசிரியர் அ. தம்பித் துரைக்கு "திருமுறை திலகம்" எனும் பட்டம் வழங்கி கலாபூஷணம் சு.துரைசிங்கம் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**பதின்மூன்றாம் திருவிழா**

### அருள்புரிவாய் நாகபூஷணி

நயினையிலே வீற்றிருக்கும் நாகபூஷணி– உமை
நம்பியோர்க்கு அருள் புரிவாய் நாகபூஷணி
பக்தியோடு பரவசமாய் நாகபூஷணி
உம்மிடம் பறந்தோடி வாறோமம்மா நாகபூஷணி
ஐந்து தலை நாகம் மீது நாகபூஷணி – அமர்ந்து
உமது அன்பருக்கு அருள் புரிவாய் நாகபூஷணி

*சுது மலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவன்*
*த-நிசாந்*

### அருள் சுரந்திடுவாய்

அலையோசை மத்தியிலே
அருளாட்சி புரிபவளே–நாம்
அழுமோசை உன் செவிகளில்
கிட்டவில்லையா? அன்னையே!
மணித்தீவின் மகுடமாய்
குடியிருக்கும் காமாட்சியே
மௌனித்துப் போன
மனங்களால் தினம்
உன் புகழ் பாடுகின்றோம்
ரணம் கொண்ட கரங்களால்
தொழுகின்றோம் – உன்
திருவடிதனை – தீர்வொன்று
நீ தந்து வெந்து போன
எம் வாழ்வை மீட்டிடவே
அருள் சுரந்திடுவாய்!

*எஸ். கவிநேசன்–சண்டிலிப்பாய்.*

### நலம் காக்கும் நாயகியே !

நயினையின் நாயகியே
நாகபூஷணி தாயவளே
தீவின் நடுவில் அமர்ந்தவளே
தீரா அருள்தனை புரிபவளே
நாடிவரும் அடியோர்க்கு
நலம் காக்கும் நாயகியே
பாடி நிதம் கேட்கிறேன்
பாரில் அமைதி புரிவாயாக

*கோவையூர் –ஜெனத்குமரன்.*

### வந்து பார் அன்னையே

அன்பைச் சொரிந்து அருள் பாலிக்கும்
எங்கள் அம்பிகையே
உமைநம்பி வந்தவர்க்குக் கேட்ட வரந்தருபவளே
சீர் பொழியுமிச் சிறிய தீவில் வீற்றிருந்து
பேர் பொழிய வைத்த பேரரசியே
பார் புகழும் உமது நல்லருளால்
பட்டினியின்றியெமைப் பல்லாண்டு வாழவைப்பாயே
நொந்து போயிருக்குமெமை வந்து பாரன்னையே.

*மு. கந்தையா–சாவகச்சேரி.*

### நம்மைக் காப்பவள் நாகபூஷணி

நம்மைக் காப்பவள் நாகபூஷணி
நலமெலாம் தருபவள் நாகபூஷணி
இம்மை வாழ்வுக்கு நாகபூஷணி
இன்பம் பயப்பவள் நாகபூஷணி
தம்மை பணிவோரை நாகபூஷணி
தாங்கி நிற்பவள் நாகபூஷணி
அம்மைஅப்பனாய் நாகபூஷணி
அகிலம் ஆள்பவள் நாகபூஷணி

*சங்குநாதன்–திருநெல்வேலி*

நயினை நாகபூசணி தாயின் அருளால்
அனைவருக்கும் துன்ப துயரங்களற்ற நிம்மதியான
வாழ்வு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**எரிக்கனேஷ்**

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

*கிளை:* 91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்,
86, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்,
564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2486

# இங்கிலாந்து அணி வெற்றி



பீற்றர்சன்

(சேஸ்ரர் -லீ - ஸ்ரீற்)

பிற்றர்சன் சிறப்பான சதமடிக்க முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 114 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி; 3 டெஸ்ட், ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றதுடன் இருபது -20 போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து நேற்று சேஸ்ரர் -லீ - ஸ்ரீற்றில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி; பீற்றர்சனின் சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹெவின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹொலிங் வூட் 64 ஓட்டங்களையும் மற்றும் ஷா49, பெல் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 308 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி; 42.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களை மாதத்திரமெடுத்து 114 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் மக்குலம் 36 ஓட்டங்களையும் பிளைன் 34 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் அணித்தலைவர் ஹெலிங்வூட் 4 விக்கெட்டுக்களையும் பிரோட், சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக பீற்றர்சன் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில்இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. (5)

# அக்தருக்கு விதிக்கப்பட்ட தடை 18 மாதங்களாக குறைப்பு



(கராச்சி)

சர்ச்சைக்குரிய பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் சொயிப் அக்தரின் தண்டனைக்காலம் குறைக்கப்பட்டுள்ளது. போட்டிகளில் பங்கேற்க விதிக்கப்பட்ட 5 ஆண்டு தண்டனை 18 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 70 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் அக்தர், பல்வேறு சர்ச்சைகளில் சிக்க, தேசிய அணிக்கான ஒப்பந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் கோபமடைந்த அக்தர் வெளிப்படையாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை விமர்சித்தார் இது பி.சி:பி விதிகளின்படி தவறு என்பதால் அவருக்கு 5 ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து அக்தர் மேன்முறையீடு செய்தார். இதனை நீதிபதி அப்தாப் பரூக் தலைமையிலான மூன்று நபர் குழு விசாரித்தது.தண்டனை மீது இடைக்கால தடை விதித்தது. இதையடுத்து இந்தியாவில் நடந்த ஐ.பி. எல் இருபது -20 தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு அக்தருக்கு கிடைத்தது.

இந்நிலையில் அக்தர் வழக்கில் நீதிபதி பரூக் நேற்று முன்தினம் தீர்ப்பை வெளியிட்டார்.

இதில் அவர் கூறியதாவது, விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்தவர்கள் ஐந்து ஆண்டு தடை என்பது மிக அதிகம் என கருதினர். இதனால் அதை 18 மாதங்களாகக் குறைத்துள்ளோம். அத்தோடு அவருக்கு 70 இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளோம்.

அவருக்கு பி.சி.பி நிறைய அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கவேண்டும். வழக்கை முழுமையாக ஆராய்ந்த பின்ரே தீர்ப்பு வ்ழங்கியுள்ளேன்.

இவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் அதிகம் என்பது என்னுடைய சொந்தக் கருத்தும் கூட. எங்களுக்கு யாரும் எந்த நெருக்கடியும் கொடுக்கவில்லை. இவ்வாறு அப்தாப் பரூக் தெரிவித்தார். (5)

# ரஷியாவிடம் வீழ்ந்த கிரீஸ் காலிறுதி வாய்ப்பை இழந்தது



(சால்ஸ்பர்க்)

யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடரில் ரஷ்யாவிடம் கிரீஸ் தோல்வி அடைந்து காலிறுதிக்கு நுழையும் வாய்ப்பை இழந்தது.

யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடர் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினமிரவு நடந்த முதல் போட்டியில் ஸ்பெயின்-சுவீடன் அணிகள் மோதின.

இப்போட்டியில் ஸ்பெயின் 2:1 என்ற கோல் கண்க்கில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே ஒரு போட்டியில் ஸ்பெயின் வெற்றி பெற்று மூன்று புள்ளிகள் பெற்றிருந்தது.

இவ் வெற்றியின் மூலம் மேலும் மூன்று புள்ளிகள் பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. மற்றொரு போட்டியில் ரஷ்யா -கிரீஸ் அணிகள் மோதின. இதில் ரஷ்யா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கிரீஸ் நடப்பு யூரோ சம்பியனாகும். இது முதல்போட்டியில்சுவீடனிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இப்போது இரண்டாவது போட்டியில் ரஷ்யாவிடம் தோல்வி அடைந்துள்ளது. (5)

# மாகாண சபைத் தேர்தல்களில் அரசுக்கு எதிராக சந்திரிகா பிரசாரம்?

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபடவுள்ளதாக தெரியவருகிறது.

நாட்டின் சமகால அரசியல் போக்கில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரால் தனித்து நின்று போராட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை இருப்பதாக சுட்டிக்காட்டும் அரசியல் தரப்புக்கள் அதன் காரணமாக அவர் சந்திரிக்காவுடனும் மங்கள சமரவீரவுடனும் இணைந்து புதிய கூட்டணியை அமைக்க முயற்சிப்பதாகவும் தெரிவிக்கின்றன.

அதேவேளை மாகாண சபைத்தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரசாரங்களில் ஈடுபடுவார் எனவும் அவரது வருகை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் பலமாகஅமையும் என நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சந்திரிகா குமாரதுங்கவை மீண்டும் அரசியலில் ஈடுபடச் செய்து அவர் ஊடாக சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றத்தைக் கொண்டுவர அழைப்பு விடுக்கலாம் என ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்ப்பதாகவும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊழல்கள் போன்றவற்றினால் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டிருக்கும் பொதுவான அதிருப்தியினை பயன்படுத்தி அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான வழிகளில் ஒன்றாகவே இந்தக் கூட்டணியை அமைக்க முயற்சிப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ச-5)

# கணக்கிடமுடியாத அளவில் சட்டவிரோத ஆயுதங்கள்

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்கள் நாட்டில் பாரிய பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளதாக சிறு ஆயுதங்கள் தொடர்பான வலைப்பின்னலின் இலங்கைக்கான தலைவர் கிங்ஸ்லி றொட்ரிக்கோ தெரிவித்துள்ளதாவது,

கடந்த பல வருடங்களுக்கு முன்னதாக மாத்திரம்,பெருந்தொகையான சட்டவிரோத ஆயுதங்கள் அழிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் இம்மாத இறுதியில் இலங்கையின் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் எவ்வளவு தொகை ஆயுதங்கள் உள்ளன என்ற தகவலை வெளியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அநுராதபுரம் ஹொரவப்பொத்தான மற்றும் பொலநறுவை ஆகிய இடங்களில் சுமார் ஆயிரம் வன்முறைச் சம்பவங்களுக்குச் சட்டவிரோத துப்பாக்கிகளே காரணமாக அமைந்திருந்ததாக தரவுகள் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் சுமார் 35ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதனை விட அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ச-5)

பெருமகிழ்வோடு அழைக்கின்றோம்

Digital Electronics
Show Room

யாழ் மண்ணில் இலத்திரனியல் துறையில்
புத்தொளிபரப்ப கஸ்தூரியார் வீதியில் ஓர் காட்சியறை

நிகழும் வைகாசித் திங்கள் 16.06.2008 இன்று
காலை 11.53 மணி தொடக்கம் 01.32 மணிவரையுள்ள சுபநேரத்தில்

திரு.T.ஜெயராஜசிங்கம்
(சிரேஷ்ட முகமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)
அவர்களால் இன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.

J.G Creation-774913123




(C-1219)

# மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி அமைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் கூட்டணி அமைத்துப் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்து போட்டியிடுவதற்கு ஐ.தே.க. நடவடிக்கை எடுத்துள்ளது.

இரு மாகாண சபைகளையும் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அதனை முறியடிக்கும் வகையிலேயே கூட்டணி அமைக்க ஐ.தே.க. தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் ஐ.தே.கவுடன் கூட்டணி அமைப்பதற்கு மங்கள சமரவீர எம்.பி.தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவும் மேலக மக்கள் முன்னணியும் இணக்கம் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தே போட்டியிடும் என தெரிய வருகின்றது. இது தொடர்பில் இருகட்சியினரும் பேச்சுவார்த்தைகளை சில தினங்களுக்குள் நடத்தவுள்ளனர். (ச)

## பொலநறு...

தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் வவுனியா மற்றும் வாழைச்சேனை உட்பட்ட பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உடப்பு ஆண்டிமுனை மற்றும் செல்வபுரம் ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## துப்பாக்கிச்...

நேரக் கடமை முடிந்து பொலிஸ் நிலையத்திற்கு ஓட்டோ ஒன்றில் திரும்பிக் கொண்டிருக்கையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்பின்பு மட்டக்களப்பு நகரிலும் புறநகர்ப் பிரதேசங்களிலும் இப்படியான 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின்போது 7 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தங்கம்மா...

இவருக்கு மதுரை ஆதீனத்தில் 'செஞ்சொற்செம்மணி' என்ற பட்டமும் ஈழத்துச் சிதம்பரத்தில் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டமும் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் 'சிவஞான வித்தகர்' என்ற பட்டமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டமும் 'கலாசூரி' பட்டத்தை இலங்கை அரசும் வழங்கிக் கௌரவித்தன.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 1982 ஆம் ஆண்டு சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சிவத்தமிழ் இன்பம், சிவத்தமிழ்ச் செல்வம், சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரை, இலண்டனில் ஏழு வாரம், சிறில லிதா சகஸ்ரநாம, சைவக் கிரியைகளும் விரதங்களும், வாழும்வழி போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இழப்புக் குறித்து சமய, சமூகத் தலைவர்கள் இரங்கல் செய்திகளை வெளியிட்டுள்ளனர். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழையில் இடம்பெறும். (ச-5)

## அன்னையின்...

இத்தகைய பெருமைக்குரிய அன்னையை இழந்து விட்டோம் என்ற துயரிலும் அவரின் ஆத்மா இறைவனோடு இணைந்து கொள்ள நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஆயுதம்...

விசேட சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர், தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்திப்பதற்காக கிளிநொச்சி செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தும். அவர்கள் பேச்சுக்களில் ஈடுபட விரும்பினால் முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என ஜனாதிபதி லண்டனில் வைத்து த ரைம்ஸ் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விவசாயத்...

இம்மாநாட்டில் யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்பட்டு வருகின்றன விவசாய சம்மேளனம் சார்பில் அவற்றின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை யாழ்.மத்திய கல்லூரி மாணவனான த.கடோற்கணின் புதிய கண்டுபிடிப்பான சுழல் நீர்ப்பம்பி யாழ்.விவசாயிகளுக்கு இன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் விவசாயிகள் மத்தியிலேயே இச் சுழல் நீர்ப்பம்பி அறிமுகப்படுத்தி வைக்கப்படவுள்ளது. (ச)

## புதுக்குடியிருப்பில்...

விமானக் குண்டுத் தாக்குதலில் விசுவமடு புன்னைநீராவியடியைச் சேர்ந்த நாகதம்பிராசா (வயது-20), ஐயாத்துரை சுந்தரலிங்கம் (வயது-47) ஆகிய இருவருமே பலியானவர்களாவர். மேலும் இருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 6பிள்ளைகளின் தந்தையான தங்கராசா, வேணாவிலைச் சேர்ந்த அசோகன், பத்மநாதன் (வயது-76), புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெயமோகினி (வயது-32), கலைத்தேவன் (வயது-36), கற்சிலைமடுவைச் சேர்ந்த லட்சுமன் (வயது- 58), புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தினேஷ் (வயது-18), புதுக்குடியிருப்பு 10 வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரன் (வயது-52), இரணைப்பாலையைச் சேர்ந்த பார்புகழன் (வயது-22), வினோதன், விசுவமடுவைச் சேர்ந்த பானுஜன் ஆகியோரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளவர்கள் ஆவர்.

விமானக் குண்டு வீச்சில் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததாகவும் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய கட்டடத்திற்கும் சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது விமானக் குண்டு வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதாக விமானப் படையின் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தால் மேற் கொள்ளப்படும் பிரதான விநியோக நிலையம் மற்றும் வாகனங்களை பழுதுபார்க்கும் நிலையங்கள் மீதே குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## திருமணம் பிற்போடப்பட்டுள்ளது

செல்வன் சிவபாதசுந்தரம் தர்மசீலனுக்கும் செல்வி அழகரத்தினம் ஜெயமிதுலாவுக்கும் இன்று (16.06.2008) தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

தகவல்,

திருமதி ம.சிவபாதசுந்தரம்<br>அராலி மத்தி,<br>வட்டுக்கோட்டை.

திரு.திருமதி அழகரத்தினம்<br>பிள்ளையார் கோவிலடி,<br>மாதகல்.

(1347)

# இறைபதம் அடைந்தார்

## சிவத்தமிழ்ச் செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி



(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, முன்னாள் ஆசிரியர் மட்டக்களப்பு சென்சிசிலியா, கொழும்பு பார்த்திமா முஸ்லீம் மகாவித்தியாலயம், அளவெட்டி சதானந்தா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

துர்க்காபுரம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னை 15.06.2008 பி.ப 12.15 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தர் அப்பாக்குட்டி தையல்பிள்ளை தம்பதிகளின் மகளும்,அமரர் சின்னம்மா, கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் பொன்னம்பலம், அமரர் சண்முகராஜா ஆகியோரின் அன்பு மைத்துணியும், அமரர் மயில்வாகனம், அமரர் மாணிக்கம், கனகலட்சுமி ஆகியோரின் சிறிய தாயாரும், உமாசுதன் (திருமகள் அழுத்தகம்), பாமதி (தெல்லிப்பழை M.P.C.S), ரேவதி (ஆசிரியர் கட்டுவன்புலம்), செந்தூரன் (அம்பாள் தொலைத்தொடர்பு நிறுவனம்) ஆகியோரின் பெரியதாயாரும் ஞானேஸ்வரன் (சீமெந்து கூட்டுத்தாபனம்), கணேசலட்சுமி (ஆசிரியர் மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகண்ஜா (பிரதேச செயலகம் தெல்லிப்பழை) ஆகியோரின் மாமியாரும் பிருந்தா,கபிலன் ஆகியோரின் கோயில் அம்மம்மாவும், உமையாள், உமைபாரதி, உமைபைரவி, சரண்ஜா, சாயிராம் ஆகியோரின் கோயில் அப்பம்மாவும் டாக்டர் சிங்க அரியரட்ணம் (தலைவர் 782 மினிபஸ் சங்கம்) அன்பு அன்ரியும், சைவ உலகின் ஆன்மீக வழிகாட்டியும் தாயும் ஆவார்.

இன்று அன்னாரின் பிறந்த மனையாகிய 'தாமரை' இல்லத்தில் காலை 7.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்றுப்பின் துர்க்காதேவி யாத்திரிகர் விடுதியில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் சிறப்பு பிரார்த்தனை வழிபாடு, கூட்டம் இடம்பெற்று மாலை 2.00 மணிக்கு அன்னாரின் திருவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி: 021 222 5309 குடும்பத்தவர்.

(C-1221)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகபூரணி சிவராசா



சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்த்திரேலியா, சிட்னி வென்ற் வேத்வில்லை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை (விக்னேஸ்வரா வித்தியாலயம், மீசாலை) திருமதி நாகபூரணி சிவராசா அவர்கள் நிறைவாக வாழ்ந்து 15.06.2008 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, மீனாட்சிபிள்ளை (பச்சைமுத்து) யின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநெல்வேலி நாகமுத்து சின்னபிள்ளையின் அன்பு மருமகளும், நாகமுத்து சிவராசா (இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தன் (LONDON) சிவோதயம் (துவம் - U.S.A), மீனா, (WENT WORTHVILLE), சிவநாதன் (நாதன் - ஏரோலங்கா உரிமையாளர் U.S.A) ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதரா (LONDON), குமுதகுமாரி (U.S.A), சிவராசா (WENT WORTHVILLE), குசலகுமாரி (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்ற நாகரட்ணம், காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானலோசினி நாகரட்ணம், கமலா தேவி, துரைராசாவின் மைத்துணியும், ஜனகன் (LONDON), ரஜீவ் (AUSTRALIA), தனுஷன் (U.S.A), நிரோஷன்அஸ்வின் (U.S.A) ஆகியோரின் அன்புப் போர்த்தியுமாவார்.

.அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.06.2008 வியாழக்கிழமை அன்று சிட்னியில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிட்னி வென்ற் வேத்,<br>அவுஸ்த்திரேலியா.

தகவல்<br>குடும்பத்தினர்

(1348)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.